பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி 07 | சனிக்கிழமை | (20-03-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 92

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# கிளிநொச்சி வாக்காளர்களுக்கு முகமாலையில் வாக்குச்சாவடி

## தே.அ.அ. பரிசோதனை இல்லை யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான வாக்குச் சாவடிகள் முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் அமைக்கப்படவுள்ளன. இது விடயம் தொடர்பாக நேற்று மாலை 3 மணியளவில் யாழ். செயலகத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.**

யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமான செ.பத்மநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் இராசநாயகம், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், நிர்வாகப் பொறுப்பாளர் விஜிதரன், யாழ். குடாநாட்டு பிரதி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல குலதுங்க மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகளை அறிவிக்கும் பொருட்டு யாழ். அரச அதிபர் நேற்று மாலை 4.30 மணியளவில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அங்கு தெரிவிக்கப்பட்டதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் 63 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 57 ஆயிரம் பேர் கிளிநொச்சியிலும், 6ஆயிரம் பேர் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியிலும் உள்ளனர். இவர்கள் அனைவரும் வாக்களிக்கும் பொருட்டு முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் 61 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். வாக்களிப்பு நடைபெறும் தினத்தன்று இராணுவததினர் அப்பகுதியில் இருந்து முற்றாக அகற்றப்படுவர். எக்காரணம் கொண்டும் வாக்களிப்பு நிலையப பகுதிகளுக்கு இராணுவம் வர அனுமதிக்கப்படமாட்டாது. வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்புக்கென பொலிஸாரே பணிக்கமர்த்தப்படுவர். வாக்காளர்கள் அடையாள அட்டை கொண்டு செல்லத் தேவையில்லை. வாக்களிக்கவரும் வாக்காளர்கள் பயணப் பொதி ஏதாவது கொண்டு வரும் பட்சத்தில் சோதனைக்கு உட்படுத்தப்படுவர். வாக்காளரின் நலன் கருதி வாக்குச்சாவடியை அண்டிய பகுதியில் சிற்றுண்டிச் சாலை, குடிதண்ணீர், மலசலகூட வசதி என்பன ஏற்படுத்தப்படும்.

கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்வதற்கு வசதியாக போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்படவிருக்கின்றன.

இதற்கு தமிழீழ காவல்துறையினர் தமது ஒத்துழைப்பை வழங்குவதாக கூறியுள்ளனர். மேலும் வாக்காளர்களின் போக்குவரத்து வசதிக்கென கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் 5.3 மில்லியன் ரூபாவைக் கோரியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் மாதச் சம்பளம் மார்ச்சில் பெறலாம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு அரசாங்க,மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு மார்ச், ஏப்ரல் மாதச் சம்பளத்தை மார்ச் 31ல் வழங்குமாறு அரசாங்கம் பணித்துள்ளது.

அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைய அரச ஊழியர்களுக்கான சம்பளத்தை வழங்க திறைசேரி தீர்மானித்துள்ளது.

இதேவேளை பிரதான ஐந்து வர்த்தக சங்கங்கள் தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவை சந்தித்து கலந்துரையாடியதன் பயனாக தனியார் துறையினருக்கும் ஏப்ரல் மாத சம்பளம் இம்மாதத்தில் வழங்கப்படவிருக்கிறது. (த-6)

## அன்னை பூபதியின் நினைவு எழுச்சிநிகழ்வு நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நேற்றுக்காலை 9 மணிக்கு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஆரம்பமானது.

இந் நிகழ்வில் . ஈகச்சுடரினை மாவீரர் கப்டன் கலைமதியின் தாயாரும்,கப்டன் சுருளி,கப்டன் அருணா, 2ம் லெப்.தமிழ்ச்செல்வன் ஆகிய மாவீரர்களின் சகோதரர்களும் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத்தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மலர்மாலை அணிவித்தல், மலர் வணக்கம் மற்றும் நினைவுரைகள் என்பன இடம்பெற்றன.

அன்னை பூபதியின் நினைவு தின நிகழ்வுகள் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் மற்றும் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை என்பவற்றிலும் நடைபெற்றது.(ச)

## அரச மருத்துவர்களின் வேலைநிறுத்தம் முடிவு

(கொழும்பு)

அரசாங்க மருத்துவர்களினால் கடந்த 9 நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

கே.என்.சொக்ஸியுடன் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையையடுத்தே இப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வைத்தியர்கள் அனைவரையும் இன்றிலிருந்து வேலைக்குச் செல்லுமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேட்டுள்ளது.

இதேவேளை அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## வடக்கு-கிழக்கு இணைவில் மாற்றுக் கருத்து இல்லை

### ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அபிவிருத்தி என்ற விடயத்தில் என்னுடைய நூற்றுக்கு நூறுவீதமான ஆதரவு உண்டு. உண்மையிலேயே மட்டக்களப்பு மாவட்டம் அபிவிருத்தியடைய வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

தந்தைசெல்வா காலத்தில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களிலும், இலங்கை இந்திய உடன்படிக்கையிலும் வடக்கு-கிழக்கு இணைந்த பிரதேசம்தான் தமிழீழம் என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடுகளும் இல்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 4 அம்சக் கோரிக்கையினை முன்வைத்தே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளோம். விடுதலைப் புலி

(12ஆம் பக்கம் பார்க்க)


உழைப்பைச் சுரண்டும் நிதி அறவீடுகளுக்கு
எதிராக ஒன்றுபட்டுச் செயல்படுவோம்!
சொந்தமண்ணில் சுகவாழ்வுக்குத் தடைபோட
எவருக்கும் உரிமை இல்லையென உரத்து முழங்குவோம்
மக்களே எங்களுக்கு ஆணை இடுங்கள்

X
(8511)
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)


தமிழினத்தின் விடியலுக்கான தீர்வு
சுயநிர்ணய உரிமையுடனான
சுதந்திர வாழ்வு.....
வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான
சுயேச்சைக்குழு - 01 | X | 4 | 3
திரு.வீ.ஆனந்தசங்கரி
(முன்னாள் பா.உ. யாழ்ப்பாணம்)
இல. 4

செ.பத்மநாதன்
(வல்வெட்டித்துறை முன்னாள் நகரசபை உறுப்பினர்)
இல. 3

# கேள்வி அறிவித்தல்

## வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு கட்டிடங்கள் திணைக்களம்

1. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கனனி அலகு - கட்டடப் பகுதிக்கு உருக்கு கூரைவகைகள் அமைத்து, உயர்த்தி, பொருத்துதல். இவ் வேலைகளுக்கான சீலிடப்பட்ட கேள்விகள், யாழ்ப்பாணம் கட்டிடத்திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபைத் தலைவரால் 2004.03.31 மு.ப. 10.00 மணிவரை கோரப்படுகின்றது.

2. கேள்விப்பத்திரங்கள் 2004.03.26ம் திகதி பி.ப. 3.30 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணமாக ரூபா ஆயிரம் மட்டும் (ரூபா. 1000/-) செலுத்தி யாழ்ப்பாணம், கடற்கரைவீதி, கட்டிடங்கள் திணைக்கள, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விகள் மூடப்பட்டவுடன் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்கள, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் உடன் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

4. கடந்த 5 வருடங்களில் இதேமாதிரியான வேலைகள் செய்த முன்னைய அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டுமே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி ஆவணங்களைப் பெற முன் இதற்கான ஆவணச்சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

5. பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்களம், மே/பா பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) கேள்விச் சபைத் தலைவருக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

6. தாமதப் பிணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன், மேலதிக விபரங்கள் யாழ்ப்பாணம், கடற்கரைவீதி, கட்டிடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ந.தேவராஜன்,
*பிரதம பொறியியலாளர்,*
*கட்டிடங்கள் திணைக்களம்,*
*கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.*

*(C/7397)*


## இந்தியாவை பாகிஸ்தான் வென்றது

(இஸ்லாமாபாத்)

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பெஷாவரில் நேற்று நடைபெற்ற மூன்றாவது ஒரு நாள் சர்வதேசப்போட்டியில் பாகிஸ்தான் அணி 4 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணி 9 விக்கெற்றுக்களை இழந்து 244 ஓட்டங்களைப்பெற்றது. துடுப்பாட்டத்தில் இநதிய அணி சார்பில் யுவராஜ் சிங 65 ஓட்டங்களையும்,ராகுல் டிராவிட் 33 ஓட்டங்களையும்,சௌரவ் கங்குலி 39 ஓட்டங்களையும், லக்ஸிமிபதி பாலாஜி 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் சபீ அஹமட் 3 விக்கெற்றுக்களையும், அப்துல்ரஸாக், சொய்ப் மலிக் ஆகியோர் தலா 2 விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 47.2 ஓவர்களில் 247 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெற்றால் வெற்றி பெற்றுள்ளது. துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணியின் ஆரமப துடுப்பாட்ட வீரரான யஸீர் கமீட் 98 ஓட்டங்களையும், அப்துல் ரஸாக் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும், மொய்ன்கான் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றனர். 5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 2:1 என்ற அடிப்படையல் பாகிஸ்தான் அணி முன்னிலையில் உள்ளது.இரு அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் சர்வதேசப்போட்டி நாளை 21ம் திகதி லாகூரில் பகலிரவுப் போட்டியாக நடைபெறவுள்ளது. (ச-121)





ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த இலங்கை கிரிக்கெட் அணிவீரர் றொசான் மகாநாம தலைமையிலான குழுவினர் யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் கிரிக்கெட் வீரர்களுடன் காணப்படுகிறார்.

*(படங்கள்:- ஐங்கரன், நோயல்)*


## எம்மை நாமே ஆளவேண்டும்

எமது இனத்தின் பெருந்தலைவர்கள் கண்ட கனவுகள்
சோரம்போகாத எமது இன்றைய தலைமையில் நனவாக,
கூட்டுறவாளர்களைக் கொண்ட
**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை**
வீட்டுச் சின்னத்திற்கு புள்ளடி போட்டு 13ஆவது
நாடாளுமன்றத்தில் அமர உழைப்போம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
*கட்டைவேலி – நெல்லியடி*
*ப.நோ.கூ.சங்கம்.*

கரவெட்டி.
2004.03.20

*(C/7450)*

# அக்கினியில் சங்கமித்த அறிவின் விடியலுக்காய்......!



✡ நூலகம் எரிந்தது எம் சேமிப்பு தொலைந்தது.
✡ அறிஞர்கள் மடிந்தனர் எம் ஆக்கங்கள் தொலைந்தன.
✡ சட்டங்கள் எல்லாம் இருளோடு கலைந்தன
✡ உரிமைகள் தொலைந்தன... வறுமைகள்... மலிந்தன
பார்த்திருந்த பல பேர்கள் பேசா மடந்தையாய்
என்செய்வோம் பராபரமே என்றோய்ந்து இருப்பதுவும்
வீண் பேச்சு பேசி ஏன் என்னுயிரை மாய்க்கவேணும்....
தானுண்டு... தன்பாடுண்டு... நமச்சிவாய வாழ்கவென...?

# யுத்தமது எம்மினத்தை சத்தமிலா சடப்பொருளாக்கியது...!

பல்கலைகள் பாங்காய் கற்பதற்குச் சென்றவர்கள்
நின்றிங்கு தனிமனித சுதந்திரத்தை குலைப்பதுவோ!
பிடி அவனை... விடாதே பிடியெனவும்... ஏன் வந்தாய் எனக்கூவி
செவி பற்றிப் பிடித்திழுத்து கொடுந்தமிழில் அபிஷேகம்...!
அந்தரங்க வார்த்தையெல்லாம்... அத்துப்படி போங்கோ!
எம் தமிழே... சரஸ்வதியே எல்லாமே உன் காப்பு

**அறிவின்விருத்திக்கும், எம் ஆற்றலின் விழிவுக்குமாய், ஒன்றிணைந்து வாக்களிப்போம்.**

# வீ.ஆனந்தசங்கரி

(தலைவர்-தமிழர் விடுதலைக் கூட்டணி)
தலைமையிலான

## சுயேச்சைக் குழு 1

விளம்பர அனுசரணை:-
*செந்தமிழன் வி.பி. ஆதரவாளர்கள்*
*-கனடா-*

அறிவித்தல்:- எக்காரணம் கொண்டும் சுயேச்சைக்குழு - 1 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளமாட்டாது என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றோம். தயவுசெய்து வீண் வதந்திகளை நம்பவேண்டாம். *(8512)*

# சுயநலனுக்காக இராணுவத்துடன் இணைந்து எமது பிள்ளைகளைப் பலிக்கடாவாக்குவதா?

## வாகரைப் பகுதியில் துண்டுப்பிரசுரம்

(மட்டக்களப்பு)

தேசியத் தலைவரின் காலத்தில் தமிழீழம் பெறுவோமெனக் கூறி பிள்ளைகளை அழைத்தவர்கள் இன்று தமது சுயநலனுக்காக இராணுவத்துடன் இணைந்து எங்கள் பிள்ளைகளை பலிக்கடாவாக்குவதற்கு ஒரு போதும் அனுமதிக்கக் கூடாதெனக் குறிப்பிட்டு, மட்டக்களப்பு வாகரை மக்கள் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில்,

மீண்டும் ஒரு யுத்தத்திற்கு நமது உறவுகளை பிரதேசவாதம் என்று கூறி, சுயநலநோக்கம் கொண்ட கருணா தயார் செய்து வருகிறார். இதற்கு தனது சகோதரரான ரெஜியை நியமித்து வாகரை மற்றும் வெருகல் பகுதிகளில் சகோதரச் சண்டைக்குரிய தயார்ப்படுத்தல்களை செய்து வருகின்றார். சகோதர பாசம் என்ற வகையில் ரெஜியும் மிகவும் துரிதமாக பதுங்குகுழிகளை அமைத்து ஆண், பெண் போராளிகளை இரவு பகலாக தங்களின் சுயநலத்திற்காக காவல் கடமைகளில் ஈடுபடுத்தி வருகின்றார்.

இவ்வளவு காலமும் மீனகம் என்ற இராணுவத் தளத்தில் வைகதிருந்த பிள்ளைகள் அனைவரும், இராணுவத்தின் உதவியுடன் கொழும்பு வீதியால் இரவோடு இரவாக நகர்ததப்பட்டுள்ளனர். எந்த இராணுவத்தற்கு எதிராக ஆயுதம் ஏந்தினோமோ அந்த இராணுவத்தின் உதவியுடன பிள்ளைகள் வாகரை மற்றும் வெருகல் காடுகளில் சகோதார சண்டைக்காக விடப்பட்டிருக்கின்றனர்.

திருமலையில் இருந்து தாக்குதலுக்காக தளபதி சொர்ணத்துடன் அணிகள் சண்டைக்கு வருவதாக கூறியே இவர்கள் அங்கு நிற்கின்றனர். உங்கள் பிள்ளைகளை இதற்காகவா ஒப்படைத்தீர்கள்? தலைவர் படத்திற்கு முன் திலகம் இட்டு வழி அனுப்பினீர்கள் மட்டு. அம்பாறை மண்ணை மீட்டெடுக்கத் தானே பிள்ளைகளை அனுப்பினீர்கள். தேசியத் தலைவரின் காலத்தில் தமிழீழம் பெறுவோம் என்று கூறி அழைத்தவர்கள் இன்று தமது சுயநலனுக்காக இராணுவத்துடன் சேர்ந்துகொண்டு உங்கள் பிள்ளைகளை பலிக்கடாவாக்க ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். இன்றே விழிப்படையுங்கள்! விரையுங்கள்!

உங்கள் பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் செல்லுங்கள். உரிமைப்போர் என்றால் அனைவரும் பங்கெடுப்போம்.பொய்ப் பிரசாரங்கள் கூறுபவர்களை ஓரம் கட்டுங்கள், தலைவரின் படங்களை தந்தவர்களே அவரின் படத்தை எரித்தும், கிழித்தும் திரிகின்றனர். சகோதரப் போர் ஒன்றின் மூலம் உங்கள் பிள்ளைகளை வீணே இழந்துவிடவேண்டாம். அவற்றிற்கு அனுமதியாதீர்கள். வாகரைக்கு சென்று உங்கள் பிள்ளைகளை கேளுங்கள். தமிழீழ விடுதலைக்கு வீட்டுக்கு ஒருவராக சென்றவர்களை வீணாகச்சாக அனுமதிக்காதீர்கள். சகோதரச் சண்டையில் ஈடுபடப்போவது கருணாவினதோ, அல்லது அவரின் தம்பி ரெஜியினதோ பிள்ளைகள் அல்ல. உங்கள் பிள்ளைகளே!

எனவே, உரிமையோடு சொல்கிறோம். உடன் சென்று உங்கள் பிள்ளைகளை மீட்டெடுங்கள். விரைவாக சிந்தித்துச் செயல்படுங்கள். அழிவுகள் மீண்டும் வேண்டாம். உறவுகளுககுள் ஓர் போர் வேண்டாம். ஒன்றுபடுங்கள். பிரதேசவாதம் எமக்கு வேண்டாம். தமிழீழம் தான் எமக்கு வேண்டும். உரத்துக் குரல் கொடுங்கள். வாகரையிலுள்ள உங்கள் பிள்ளைகளைப் பார்க்க மிகவும் கவலையாகயிருக்கிறது. பெற்றோர்களே விழிப்படையுங்கள. ஒன்று சேருங்கள். உங்கள பிள்ளைகளை உங்கள் வீட்டுக்கு உடன் அழைத்துச் செல்லுங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி-18)

# ஸ்ரீ.மு.காங்கிரஸ் கட்சி ஆதரவாளர் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காவத்தை எனும் இடத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் 9பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஒருவாருக்கு துப்பாக்கியால் சுட்ட காயம காணப்படுவதாகவும், ஏனையோர் அடிகாயங்களுக்கு உள்ளானதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவமானது இராணுவத்தினரின் அடாவடித்தனத்தினால் ஏற்பட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் அனுரவி கூறியுள்ளார்.

மேற்படி இடத்திற்கு ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியின் தலைமை வேட்பாளர் எம்.எல்.ஏ. எம்கிஸ்புல்லா சென்றபோது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதர வாளர்கள் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனா.

அதன் எதிரொலியாகவே முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ச)

# 13 அமைச்சுக்கள் ஜனாதிபதியால் ரத்து

(கொழும்பு)

ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்ட அமைச்சரவை அந்தஸ்தில்லாத 13 அமைச்சுக்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரத்துச் செய்துள்ளார்.

அமைச்சுக்களைக் குறைக்கும் ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இவ் அமைச்சுக்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நீர் முகாமைத்துவம், வீடமைப்பு, வெளிநாட்டு அலுவல்களுக்கு உதவிபுரியும் அமைச்சு, உளநாட்டு அலுவலகள் அமைச்சு, உல்லாசப் பயணத்துறை அமைச்சு, சமுர்த்தி அமைச்சு, நீர்ப்பாசனத துறை அமைச்சு, விவசாயத்துறை அமைச்சு, தொழிலில் நுட்ப அமைச்சு, நெற்பயிர்ச்செய்கை மேம்படுத்தல்கள் அமைச்சு, காணிக்கான பதிவுகள் அமைச்சு, விஞ்ஞான தொழிநுட்பத்துறை, அமைச்சு என்பனவே கலைக்கப்பட்ட அமைச்சரவை அல்லா அமைச்சுக்களாகும்.

இதேவேளை பாராளுமன்ற விவகார அமைச்சு உட்துறை அமைச்சுடனும, நகர அபிவிருத்தி அமைச்சு, மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுடனும் இணைக்கப்படுகின்றது.

(ச)

## யாழ்.மத்திய–பரியோவான் கல்லூரிகளின்

# மாணவர்கள் சிலருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்தியகல்லூரி மற்றும் யாழ்.பரியோவான் கலலூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் சிலருக்கு எதிராக பாடசாலைச் சேவையில் ஈடுபடும் பேருந்து ஒன்றின் சாரதி யாழ்பொலிஸில் முறைபாடு செய்துள்ளார்.

மேற்படி இரு பாடசாலைகளுக்கும் இடையே தற்பொழுது மிக விறுவிறுப்பாக இடம்பெற்றுவரும் கிரிக்கெற் சுற்றுப்போட்டியை ஒட்டி யாழ்.வேமபடி மகளிர் கல்லூரியை அண்மித்த பகுதியில் மேற்படி இரு கல்லூரிகளின் மாணவர்கள் களியாட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அதேவேளை, அப்பகுதியில் கொடிகாமம் நோக்கி மாணவர்களை ஏற்றிக்கொண்டு செல்வதற்காக நின்றிருந்த பேருந்தினை தட்டி, பாட்டுப்பாடி அட்டகாசம் செய்வதில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் மேற்படி பேருந்தின் சாரதிக்கும் அங்கு நின்றிருந்த மாணவாகளுக்கும் இடையே முறுகல்நிலை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த சாரதி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். பின் அங்குவந்த பொலிஸார் இரு தரப்பினரையும் சமரசப்படுத்தி அனுப்பி வைத்தனர்.

(உ-112)

# உடல் ஊனமுற்றவர்கள் வாக்களிப்பதற்கு வசதி

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது உடல் தகுதியீனம் காரணமாக வாக்களிக்க செல்ல முடியாதவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக விசேட போககுவரத்து சேவைக்கு அந்தந்த மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு இம் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் விணணப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் அறிவித்துளளார்.

உடல் தகுதியீனம் காரணமாக நடந்து செல்லமுடியாத வாக்காளர்கள், பொதுப் போக்குவரத்து சேவை மூலம் வாக்களிக்கமுடியாதவர்களே விசேட போக்குவரத்துச் சேவைக்கு விண்ணப்பிக்கமுடியும்.

கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களை யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களிடமும், முல்லைத்தீவு மன்னார் மாவட்ட வாக்களர்கள், வவுனியா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களிடமும் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் தாயனந்த திஸநாயக்க அறிவிததுள்ளார்.

(ம)

# இரவு ரயிலில் பயணிக்கும் தமிழர் மீது கள்வர் கைவரிசை

(வவுனியா)

வவுனியா-கொழும்பு இரவு தபால் ரயிலில் தமிழ்ப்பயணிகளிடமிருந்து கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாம் இரகசிய பொலிஸார் எனத் தெரிவித்து ஒரு குழுவினர் தமிழ்ப்பயணிகளை ரயிலிலிருந்து இறக்கி அவர்களிடமிருந்து பணம், நகைகள் மற்றும் பெறுமதியான பொருட்களை அபகரித்துச் செல்கிறார்கள்.

வவுனியாவிலிருந்து அநுராதபுரம்வரை கொழும்புசெல்லும் இரவு தபால் ரயிலுககுப் பாதுகாப்பு வழங்கபபடுகிறது. அதற்கு அப்பால் எதுவித பாதுகாப்புமில்லை. அங்குதான் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-35)

# யாழ்.மாவட்டத்தில் ஒருவரைக்கூட ஐ.தே.கட்சியால் நியமிக்க முடியவில்லை

## மகிந்த ராஜபக்ஷ ஏளனம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் மூலம் ஆட்சிக்குவரும் எந்த அரசாங்கமும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தக்கூடாது என ஐக்கியமககள் சுதந்திர முன்னணியின தேசிய அமைப்பாளரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துருகிரியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சுகாதாரம், போக்குவரத்து, கல்வி போன்ற முக்கியமான துறைகள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பனதொடர்ந்தும் பாதுகாக்கப்படும். அத்துடன் பாலர்பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி வழங்கப்படும்.

நாட்டில் குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அபிவிருத்தியையும், அமைதியையும் ஏற்படுத்த ஐக்கியதேசிய முனனணி அரசு முனைந்த போதிலும், நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் ஒரு வேட்பாளரைககூட அக்கட்சியால் நியமிக்க முடியவில்லை என்றார்.

(தி-62)

# மாணவர்களுக்கு பாதணிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண இந்துமா மன்றத்தின ஏற்பாட்டில், எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் சைவப்பெரியார்களின் சமய நற்சிந்தனை இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அ.அகிலதாஸ தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், இப் பாடசாலையில் பயிலும் வறுமைக் கோட்டின்கீழ்வாழும் மாணவர்கள் மற்றும இந்துமா மன்றத்தினூடாக சமய தீட்சை பெற்ற மாணவர்களுக்கு இலவச பாதணிகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, இம் மன்றததினால் மண்டைதீவு ம.வி., மண்டைதீவு றோ.க.த.க.பாடசாலை ஆகியவற்றில் பயிலும் வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

(உ)

# யா/கல்வியியல் கல்லூரியில் பிரித்தானிய விரிவுரையாளர்

(யாழ்ப்பாணம்)

ஆங்கிலக் கல்வி விருத்திக்கான முன் முயற்சிகளில் ஒன்றாக, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கிலம் கற்பிக்க பிரித்தானிய நாட்டிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளரொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் எடுத்த முயற்சியின் பயனாக எதிர்வரும் மே மாதத்திலிருந்து மேற்படி விரிவுரையாளர் கல்லூரியில் கடமையாற்றவுள்ளார்.

கொழும்பில் உள்ள வி.எஸ்.ஓ.நிறுவனம் மேற்படி விரிவுரையாளரை ஒழுங்குசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுபற்றி கருத்துத் தெரிவித்துள்ள கல்லூரியின் பீடாதிபதி, இன்றைய கல்விச் செல்நெறியில் ஆங்கிலக் கல்வி முக்கியத்துவம் பெற்றுச் செல்கின்றது. சமகாலத் தகவல் தொழில்நுட்ப யுகத்திற்கு எமது மாணவர்களைத் தயார்படுத்த வேணடிய தேவை கல்வியுலகைச் சேர்ந்தவர்களது பாரிய பொறுப்பாகவுள்ளது. இதற்கு ஆங்கில அறிவு மிக அவசியமானது. இலங்கையில் புதிய கல்விச் சீர்திருத்தமும் கல்வியில் நவீன சிந்தனைகளும் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை இயம்பி நிற்கின்றன.

ஆனால், எமது பிரதேசத்தில் ஆங்கிலக் கல்வி விருத்திக்கான போதிய ஆசிரியர் வளமின்மை நவீன கல்விச் செல்நெறியில் எம்மைப் பொருத்திக்கொள்ள பெரும் தடையாகவேயுள்ளது எனக் குறிப்பிட்டார்.

(உ)

# வவுனியாவில் கொத்தணி வாக்குச் சாவடிகள்

(வவுனியா)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வவுனியாவில் இராணுவக்கட்டுப்பாடறற பிரதேச வாக்காளர்கள் வாக்களிக்கும் வகையில் கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வவுனியா அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பது தொடாபாக வவுனியா தெரிவத்தாட்சி அலுவலர் கே.கணேஷ் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவுடன் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுவார்த்தையின் பின அப்பகுதி மக்கள் வாக்களிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக கே.கணேஷ் மேலும் தெரிவித்திருப்பதாவது,

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள 79ஆயிரம் வாக்காளர்களும், ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாகவும், மடு றோட் சந்தியூடாகவும், உயிலங்குளம் பாதையூடாகவும் வந்து வாக்களிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனர்.

உயிலங்குளத்தில் வண்ணாமோட்டை பாடசாலையிலும் மடு றோட் சந்தியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்திலும், ஓமந்தையில் ஓமந்தை மத்திய மகாவித்தியாலயத்திலும் கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளதாகவும், வாக்காளர்கள் வாக்களிக்க வருவதற்குப் போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ம)

# அக்தரின் பந்துவீச்சு முறையற்றது

# சர்ச்சையை கிளப்புகிறார் கங்குலி

**உலகின் அதிவேகப்பந்து வீச்சாளரும், பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளருமான சொஹிப் அக்தரின் பந்து வீச்சு முறையான ஒன்றல்ல என்று சர்ச்சையை கிளப்பியிருக்கிறார் இந்திய கிரிக்கெற் அணியின் தலைவர் செளரவ் கங்குலி.**

ராவல் பிண்டியில் நடந்த இரண்டாவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு அக்தர் பெரிதும் உதவினார். ஆனால் அவர் முறையாக பந்து வீசவில்லை என்றும் அவருடைய பந்து வீச்சுப்பாணி சந்தேகத்திற்கு இடமான ஒனறு என்றும் செய்தியாளர்களுக்கு பதிலளித்த கங்குலி தெரிவித்துள்ளார்.

விதிகளுக்குடபட்டு அவர் பந்து வீசவில்லையா? அப்படியானால் பந்தை அவர் எறிகிறாரா? என்று செய்தியாளர்கள் திருப்பிக் கேட்ட போது, அவருடைய பந்துவீச்சுக் குறித்து நீங்கள் என்ன நினைக்கீறிர்கள்? அவருடைய பந்துவீச்சை எப்படிப்பட்டதென்று நம் எல்லோருக்கும் தெரியும் என்றே நான் நினைக்கிறேன் அப்படித்தானே என்று புயலைக்கிளப்புகிறார்.

மொத்தத்தில் அக்தரின்



பந்து வீச்சு குறித்த கேள்விகளுக்கான பதில்களை செய்தியாளர்களின் ஊகங்களுக்கே விட்டுவிட்ட கங்குலி அக்தருடைய பந்துவீச்சு எற்கனவே சர்ச்சைகளை உருவாக்கியிருக்கிறது. இந்த நிலையில் கங்குலியின் இந்தப் பேட்டி எரிகிற தீயில் எண்ணையை ஊற்றிவிடும் என்றே கிரிக்கெற் நிபுணர்கள் கருதுகிறார்கள்.

இதுபற்றி கங்குலி மேலும் கருததுத் தெரிவிக்கையில், 5போட்டிகள் கொண்ட இந்த ஒருநாள் தொடரில் இரு அணிகளும் அதிகளவில் ஓடடங்களைக் குவிப்பதால் பரபரப்பான நிலையை எட்டியுள்ளன.

முதலில் துடுப்பெடுத்தாடும் அணியை 275அல்லது 280ஓட்டங்களுக்குள் சுருட்டினால் மட்டுமே இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடும அணி வெல்ல முடியும்.

ஆனால் அது கடினமான ஒன்று. பாகிஸ்தான் அணியின் ஆடுகளங்களின் தன்மை ஒரேயடியாக துடுப்பாட்ட வீரர்களுக்குத் துணையாக இருக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது.

எனவே முதலில் எந்த அணி துடுப்பெடுததாடினாலும் அந்த அணி 300ஓட்டங்களைத் தாண்டிவிடும்.



இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடும் அணிக்கு அதிக நெருக்கடி உருவாகும் என்றும் விளக்கமாகத் தெரிவித்துள்ளார். (உ-121)

# சந்தர்ப்பம் பார்த்து வீசுவதில்

# முரளிக்கு நிகர் யாரும் இல்லை

## ஸ்டீவ்வோ பாராட்டு

இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரம்,உலகின் சிறந்த நட்சத்திர சுழல்பந்து வீச்சாளருமான



முத்தையா முரளிதரன் "பந்து வீச்சாளர்களில் முரளி ஒரு டொன் பிரட்மன்" என வ்ணித்துள்ளா் அவுஸ திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவரும் சாதனை வீரருமான ஸ்டீவ்வோ.

தற்போது முரளி விக்கெற்றுக்களை வீழ்த்தும் வேகத்தினைப் பார்க்குமிடத்து அவர் 108 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றிருப்பாரானால் அவர் வசம் 650 விக்கெற்றுக்கள் எப்போதோ சேர்ந்திருக்கும்.

முரளியின் பந்துவீச்சை அவுஸதிரேலியர்கள் உட்பட பலர் விமர்சித்தாலும், இலங்கை கிரிக்கெற் என வரும்போது முதல் ஆளாக நினைவுக்கு வருவது முரளிதரனின் பெயர்தான். இலங்கை கிரிக்கெற் அரங்கில் பெயர் சொல்லும் அணியாக வலம்வர முரளி பெரும் பங்காற்றியுள்ளார்.

அவுஸ்திரேலிய மண்ணில் முத்தையா முரளிதரன் பல அவமானங்களை சந்தித்தாலும், முரளிக்கு ஆதரவாக பல முன்னாள், இந்நாள் வீரர்கள் குரலெழுப்பிய வண்ணம் உள்ளனர்.

ஷேன்வோன்தான் சிறந்த சுழற்பந்து வீச்சாளா் எனப் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். அப்படி இருக்கலாம். ஆனால் வோன் 500 விக்கெற்றுக்களை வீழ்த்த 108 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். ஆனால் முரளியோ 500 விக்'கெற்றினை 87 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றே வீழ்த்தியுள்ளார்.

வெறுமனே பந்தினை வீசாமல் சந்தா்ப்பத்திற்குத் தகுந்தவாறு பந்து வீசுவதில் முரளிக்கு நிகா் முரளியே. இதற்கு காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இவர் டரன் லீமனுக்கு வீசிய பந்தே சிறந்த உதாரணம்.

மேலும் முரளியின் பந்து வீச்சை அனுபவமில்லாமல் எதிர்கொள்வது எப்போதுமே மிகவும் நெருக்கடியான ஒன்று. பந்துவீச் சாளா்களில் எட்டமுடியாத சாதனைகளை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் பந்து வீசசாளா்களில் 'பிரட்மன்' என அழைப்பதற்கு முரளிதரன் தகுதியானவா் தான் என மேலும் தெரிவித்தார். (தி-121)

# ஸ்பெயினை விட்டு இங்கிலாந்து

# அணியில் இணைவாரா பெக்காம்?

ஸ்பெயினின் ரியல் மட்ரிட் கழகத்திலிருந்து விலகி இங்கிலாந்து கழகமொன்றில் தாம் விளையாடப் போவதாக வெளிவந்த செய்திகளை டேவிட் பெக்காம் மறுத்துளளார்.

இங்கிலாந்து காலப்பந்தாட்ட அணியின் தலைவரான டேவிட் பெக்காம், நீண்ட காலமாக இங்கிலாந்தின் மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்தில் விளையாடினார். கடந்த வருடம் அவர் ஸ்பெயினின் முன்னணிக் கழகமான "ரியல் மட்ரிட்டில்" இணைந்தார்.

ஆனால், ஸ்பெனில் வசிப்பதை பெக்காமின் குடும்பத்தினர் விரும்பவில்லை எனவும், இங்கிலாந்துக்கே திரும்பிச்செல்ல பெக்காம் தீர்மானித்துள்ளார் எனவும், ரஷ்ய் கோடீஸ்வரருக்குச் சொந்தமான லண்டன் செல்ஷியா கழகத்தில் பெக்காம் இணையவுள்ளார் எனவும் செய்திகள் வெளியாகின.

ஆனால் டேவிட் பெக்காம் இச்செய்திகளை முற்றாக மறுத்துள்ளார்.

"நான் ஸ்பெயினில் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக சிலர் கூறுகின்றனர். நான் இடமாற்றம் செய்வதற்கான அவசியம் எதுவும் இல்லை. எனது ஒப்பந்தக்காலம் முடிவடைய இன்னும் மூன்றரை வருடங்கள் இருக்கின்றன. அது வரை நான் ஸ்பெயினிலே இருகக விரும்புகிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி பெக்காம் மேலும் கூறுகையில்,

இங்கிலாந்தின் செல்ஷியா கழகத் தலைவருடனோ, வேறு கழகங்களின் தலைவா்களுடனோ நான் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. என்னையும் என் குடும்பத்தினரையும் ஊடகவியலாளா்கள அளவுக்கதிகமாக பின்தொடா்வது கவலையளிப்பதாக உள்ளது.

இதேவேளை, பெக்காம் ஸ்பெயினில் வசிக்கும் ஆடம்பர வீட்டின் குத்தகைக்காலம் அடுத்த மாதம் முடிவடைகிறது. இதன் குத்தகைக் காலத்தை ஒரு மாதத்திற்கு மாத்திரமே பெக்காம் நீடித்துள்ளார். இந்தச் செய்தி பெக்காமின் இடமாற்றம் குறித்த செய்திகளை ஊா்ஜிதப்படுத்தியுள்ளது. ஆனால் ஸ்பெயினில் சொந்தமாக வீடொன்றை வாங்குவதற்காகவே தற்போதைய வீட்டின் குத்தகையை நீடிக்கவில்லை என பெக்காம் கூறியுள்ளார். (உ-121)

## விளையாட்டுச் செய்திகள்

# காலபந்தாட்ட தரப்படுத்தலில்

# பிரேசில் அணி முன்னணியில்

சா்வதேச காலபந்தாட்ட சம்மேளனத்தின் உலக கால் பந்தாட்ட அணிகளுக்கான தரப்படுத்தல பட்டியலில் பிரேசில் அணி தொடா்ந்தும் முதலாம் இடத்தில் உள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட இந்தத் தரப்படுத்தல் பட்டியலுக்கு அமைய பிரேசில் அணி 842புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திலும், பிரான்ஸ் 826புள்ளிகளைப் பெற்று 2ம் இடத்திலும், ஸ்பெயின் 791புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்திலும், நெதா்லாந்து 747புள்ளிகளைப் பெற்று 4ஆம் இடத்திலும், மெக்சிக்கோ 5ஆம் இடத்திலும், செக்குடியரசு, இங்கிலாந்து மற்றும் ஆா்ஜென்டீனா ஆகிய 3அணிகளும் சமபுள்ளிகளைப பெற்று 6ஆம் இடத்திலும் இருக்கின்றன.

முன்னா் ஆறாம் இடத்திலிருந்த ஆா்ஜென்டீனா நாட்டு அணி தொடா்ந்தும் ஆறாம் இடத்திலிருக்கும் அதே வேளை, முன்னா் 8ஆம் இடத்திலிருந்த செக்குடியரசு அணி இம்முறை 6ஆம் இடத்திறகு முன்னேறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-68)

## நியூஸிலாந்து அணி

# மூன்று விக்கெற்றை இழந்து

# 201 ஓட்டங்களைப் பெற்றது

தென்னாபிரிக்க-நியூசிலாந்து அணிகளுக்கிடையே நியூசிலாந்தில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம்நாள் ஆட்ட நிறைவின் போது நியூஸிலாந்து அணி 3விக்கெற்றுக்களை இழந்து 201ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணியினா் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 396ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

துடுப்பாட்டத்தில் கிரஹாம் ஸ்மித் 88ஓட்டங்களையும் ஹோ்லஸ் கிப்ஸ் 80ஓட்டங்களையும், ஜக்கலிஸ் 40ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனா். பந்துவீச்சில் நியூசிலாந்து அணிசார்பில் மார்டின் 6 விக்கெற்றினை வீழ்த்தினாா்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 3விக்கெற்றுக்களை இழந்து 201ஓட்டங்களைப் பெற்றுள்ளது. துடுப்பாட்டத்தில் ஸ்கொட் சைரிஸ் ஆட்டமிழக்காமல் 118 ஓட்டங்களையும், மார்க் றிச்சட்சன் 45 ஓட்டங்களையும் மைக் மிலன் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

பந்துவீச்சில் தென்னாரிபிரிக்க அணிசார்பில் பொலக், நிற்நி, கலிஸ் ஆகியோர் தலா ஒரு விக் கெற்றினை வீழ்த்தினர். (உ-121)



இந்திய கிரிக்கெற் அணி வீரர்கள் கையொப்பமிட்ட துடுப்பாட்ட மட்டையை பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிடம் கையளிக்கிறார் இந்திய கிரிக்கெற் அணித் தலைவர் கங்குலி.

# மாலைதீவு அருகே கப்பல் மூழ்கி 15 பேர் உயிரிழப்பு

மாலைதீவு அருகே பயணிகள் கப்பல் கடலில் மூழ்கியதில் 15 பேர் உயிரிழந்தனர்.

புதன்கிழமை மாலை கால் பந்து ரசிகர்களை ஏற்றிச்சென்ற கப்பல் தீனாடு என்ற தீவுக்கு அருகே கவிழ்ந்தது. அளவுக்கதிகமாகப் பயணிகள் ஏற்றப்பட்டதால் இக்கப்பல் கவிழ்ந்ததாகத் தெரிய வருகிறது.

பெரிய அலை வீசியபோது, அதில் சிக்காமல் இருக்கப் பயணிகள் அந்தக் கப்பலின் வேறு ஒரு பக்கத்திற்குத் திடீரென்று ஓடினர். அப்போது கப்பல் நிலைதடுமாறி கவிழ்ந்ததாக அக்கப்பலில் பயணம செய்து உயிர்பிழைத்த பத்திரிகையாளர் ஒருவர் கூறினார்.

அருகில் உள்ள தீவில் கால் பந்து போட்டியைப் பார்க்கச் சென்ற ரசிகர்கள் தீனாடு தீவுக்குத் திரும்பியபோது இவ்விபத்து நடந்தது.

கடலில் மூழ்கி இறந்த 15 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. 100 பேர் காப்பாற்றப்பட்டனர். மேலும், யாராவது கடலில் மூழ்கியிருக்கிறார்களா என்று தேடும் பணி தொடர்கிறது. (து)



சீனாவில் தைபிங் என்ற இடத்தில் மேய்ப்பவரைப் பின்தொடர்ந்து செல்லும் வாத்துக் குஞ்சுகள்

WORLD NEWS உலக தரிசனம்



ஸ்பெயின் நாட்டின் மாடரிட் நகரில் ரயில்களில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்ததைத் தொடர்ந்து, உலக நாடுகளில் பயங்கரவாத அச்சுறுத் தல் ஏற்பட்டுள்ளது. லண்டனில் உள்ள நாடாளுமன்ற கட்டடத்தின் அருகே ஓடிக் கொண்டிருக்கும் தேம்ஸ் நதியில் படகில் இருந்தபடியே பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள காவலர்கள்.

# ஸ்பெயினில் தீவிரவாதத்தை நிறுத்த அல்-கெய்டா இயக்கம் முடிவு

ஸ்பெயின் நாட்டில் தீவிரவாத நடவடிககைகளை நிறுத்திவைக்க அல்-கெய்டா பயங்கரவாத இயக்கம் முடிவுசெய்துள்ளது.

ஈராக் உள்ளிட்ட முஸ்லிம் நாடுகளின் விவகாரங்களில் ஸ்பெயின் அரசு தலையிட்டதால் மாடரிட நகரில் தாக்குதலை நடத்தினோம். ஸ்பெயினில் இதுவரை ஆட்சிப்பொறுப்பில் இருந்த அரசு பொதுத் தேர்தலில் தோல்வியடைந்துவிட்டது. அங்கு புதிய அரசு பதவியேற்றுள்ளது. பழைய அரசுக்கு சரியான பாடம் புகட்டிவிட்டோம்.

எனவே, ஸ்பெயின் நாட்டில் தீவிரவாத நடவடிக்கைகளை நிறுத்துமாறு எங்களது பயங்கரவாதிகளுக்கு உத்தரவிட்டுள்ளோம் என்று அல்-கெய்டா அமைப்பு அறிவித்துள்ளது.

லண்டன் நகரில் இருந்து வெளிவரும் அல்-கோதா அல்-அரபி என்ற நாளிதழில் இத்தகவல் வெளியாகியுள்ளது. (து)

# பின்லேடன் பாகிஸ்தானில் பதுங்கியிருக்க வாய்ப்பில்லை

(லண்டன்)

சர்வதேச பயங்கரவாதி பின்லேடன் தங்கள் நாட்டில் ஒளிந்திருக்க வாய்ப்பில்லை என்று பாகிஸ்தான் உள்துறை, மற்றும் போதை மருந்து தடுப்புத்துறை அமைச்சர் மக்தூம் சையது பைசல் சலே ஹயத் தெரிவித்தார்.

இதுகுறித்து லண்டனில் பி.பி.ஸி. உலக நிகழ்ச்சிக்கு அளிதத பேட்டியில் அவர் பாகிஸ்தானில் பின்லேடன் பதுங்கியிருக்க வாய்ப்பில்லை. இங்கு பதுங்கியிருந்தால், பாகிஸ்தான் இராணுவத்திடம் அவர் சிக்கியிருப்பார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பாகிஸ்தான் இராணுவம் தீவிர தேடுதல் வேட்டையை நடத்தி வருகிறது. பாகிஸ்தான் எல்லைப் பகுதி 2500 கி.மீ. தூரத்திற்கு விரிந்துகிடப்பதால், தேடுதல் வேட்டை கடினமான பணியாக இருந்துவருகிறது. எல்லை ரோந்துப்பணியில் 70 ஆயிரம் வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். தற்போது எல்லை சீலிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (து)

## சீனாவில் போதைமருந்து கடத்திய 5 பேருக்கு மரணதண்டனை

(பெய்ஜிங்)

சனாவில் போதைமருந்து கடத்திய 5 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் கடந்த 2001ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரை 76ஆயிரம் கிராம் போதைப் பொருட்களைக் கடத்தியதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இவர்களில் நான்குபேர் மீதான குற்றச்சாட்டை ஜிங்குவா மக்கள் நீதிமன்றம் உறுதிசெய்தது. இதையடுதது அந்த நால்வருக்கும் கடந்த புதன்கிழமை மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. மற்றொருவருக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவேற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

## கைதிகளுக்கு சட்டக் கல்வி

சீனாவில் உள்ள 15 இலட்சம் கைதிகளுக்கு சட்டக்கல்வி அளிககும திட்டம் கடந்த வியாழக்கிழமை தொடங்கப்பட்டது: இதன்மூலம் குற்றங்களின் எண்ணிக்கை குறையும் என்று சீன அரசு கருதுகிறது.

இதற்கு முன்னர்கூட சீனாவின் சிறைகளில் சட்டக்கல்வி வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இப்போது அதற்கென பாடப்புத்தகம் முதல்முறையாக உருவாக்கப்பட்டு கைதிகளுக்கு வழங்கப்படுகிறது. (து)

# கொலைகாரத் தந்தையிடம் இருந்து தப்பிய சிறுவன்

(அடிலாண்டோ)

அமெரிக்காவில் மனைவியைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற ஒருவர் மகனையும் துப்பாக்கியால் சுட்டார். ஆனால், அச்சிறுவன் இறந்ததுபோல் நடித்து தந்தையின் கொலை வெறியில் இருந்து தப்பினான்.

மகனும் இறந்துவிட்டான் என்று நினைத்த தந்தை தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டார்.

கலிபோர்னியா மாநிலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் நடந்தது. அச்சிறுவனின் பெயர் ஆரோன் கினார்ட்.

சிற்றுண்டிகளைச் சாப்பிட்டுக் கொண்டு பாலையும் அவன் குடித்துக் கொண்டிருந்தபோது, அவனையும், அவனது தாயையும் தந்தை துப்பாக்கியால் சுட்டார். உடனே அவன் அசைவற்று விழுந்து கிடந்தான். அதன்பிறகு அவனது தந்தை தன்னைத்தானே சுட்டுக்கொண்டார்.

சிறுவனின் கையில் மட்டும் காயம் ஏற்பட்டிருந்தது. உடனே அவன் சைக்கிளில் தன்குடும்ப நண்பர் வீட்டுக்குச் சென்று நடந் தவற்றை விளக்கினான். அவன் அதிர்ச்சியில் இருந்தபோதிலும் அழவில்லை. சிறுவயதிலேயே இவன் இவ்வளவு தைரியமாக இருந்தது பலரையும் ஆச்சரியப் படுத்தியது.

பொலிஸ் விசாரணையில் அவனது தந்தை பெயர் ஆஸ்கார் லாரன்ஸ் (வயது-83) என்றும், தாயின் பெயர் அனித்தா கினார்ட் (வயது-44) என்றும் தெரியவந்தது. (து)

# அல்போனிய – சேர்விய இனத்தவரிடையே மோதல்

(கொசுமோவில்)

அல்போனிய இனத்தவர்களுக்கும் சேர்விய இனத்தவர்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கின்ற மோதலைக் கட்டுப்படுத்துவதற்காக நேட்டோ அமைப்பு மேலும் 1000 படையினரை அங்கு அனுப்பியிருக்கிறது.

அண்மையில் வெடித்த வன்முறைகளில் 22 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 2 சேர்விய தேவாலயங்கள் தாக்குதலுக்குள்ளாகியிருக்கின்றன.

பெற்றோசியா நகரத்தில் கிறிஸ்தவத் தேவாலயம் ஒன்று தாக்குதலுக்குள்ளாகியதுடன், அந்த நகரத்திற்குத் தெற்கேயுள்ள ஒரு கிராமத்தில் இருந்த சேர்விய வீடுகளும் தீயிடப்பட்டிருக்கின்றன என ஐக்கிய நாடுகள் தரப்பில் பேசவல்ல அதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், இதற்கு முன்னதாக அருகில் உள்ள 2 சேர்விய நகரங்களில் இருந்த மசூதிகளை வன்முறைக்கும்பல்கள் கொளுத்தியிருக்கின்றன.

இந்த மோதல்கள் கடந்த புதன்கிழமை வெடித்தன. சேர்வியர்களால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் 2 அல்போனியக் குழந்தைகள் ஆற்றில் மூழ்கி இறந்ததைத் தொடந்து வெடித்த மோதல்கள் பெற்றோசியா நகரத்தை இரண்டு கூறுகளாகப் பிளவுபடுத்தியிருக்கிறது. (து)



மூன்று அடி உயரமுள்ள (இடமிருந்து) பிரவீண் குமார், புஷ்பா தம்பதிக்குப் பிறந்த குழந்தையுடன் டாக்டர் தூரி

# ஈராக்கில் சகஜநிலை திரும்ப ஐ.நா.கோரிக்கை

ஈராக் மக்கள் அன்றாட வாழ்க்கையை அமைதியுடன் நடத்த உதவுவதற்காக அனைத்து நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அனான் கூறியுள்ளார்.

பக்தாத்தில் உள்ள ஹோட்டலில் கார்க் குண்டுவெடித்து 20 பேர் இறந்தது மிகவும் துயரமான சம்பவமாகும் என்றார் அவர்.

ஈராக்கைச் சீரமைக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை இதுபோன்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள் பாதிக்கின்றன. அது மட்டுமன்றி அந்நாட்டு மக்களின் சகஜ வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது. இது மிகவும் வேதனை தருகிறது என்றார் அவர். (து)



# காரைநகர் வாரிவளவு கற்

# மண்டலாபிஷேக பூர்த்தி சங்காபிஷே

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி




வீநாயகர் அடியார்களே! காரைநகர் வாரிவளவுப் பகுதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் வீநாயகப் பெருமானுக்கு இன்று மண்டலாபிஷேகப் பூர்த்தி நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கைத் திருநாட்டில் சைவமும் தமிழும் வளம் பெற்றிருக்கும் யாழ்ப்பாணம் காரைநகர்ப் பூமியில் நான்கு வாசல்களுக்கும் இராஜகோபுரம் கொண்ட ஆலயமாக வீநாயகனின் ஆலயம் விளங்குவது சிறப்பிற்குரியது. இவ்வாலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு வீநாயகப் பெருமான் எழுந்தருளியிருந்து வரமருளிக்கொண்டிருக்கின்றார்.

மனித வாழ்வை மேன்மையடையச் செய்வது இறைவழிபாடு எங்கும் பரந்து விரிந்து இருக்கும் இறைவன் ஆலயங்களில் பிரசன்னமாகி அருட்காட்சியளிக்கின்றார்.

வீநாயக வழிபாடு எமது சமயத்தில் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. நம்வாழ்வில் ஏற்படும் விக்கினங்களை நீக்கி நற்கதி தருவது வீநாயக வழிபாடு. இச்சங்காபிஷேகத்தில் அனைவரும் கலந்து வீநாயகரின் அருளைப்பெறுவோமாக. ஆலயத்திருப்பணியைச் சிறப்பாகச் செய்யும் ஆலயபரிபாலனசபையினருக்கும் சிவாச்சாரியார்களுக்கும், காரைநகர்வாழ் மக்களுக்கும் இறைவனுடைய ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். 'என்றும்வேண்டும் இன்ப அன்பு'

நல்லை ஆதீனம்,நல்லூர்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை ஆதீன முதல்வர்





ஆலயத்தின் முன்னைய தோற்றம்

புதி[...]க

## சிவத்தமிழ் அன்னையின் வாழ்த்துச் செய்தி



வாரிவளவு அற்புத வீநாயகனை வழிபடும் பேறு கொண்டவர்கள் வார'வளவு மக்களாவார். இத்தகைய வழிபாட்டு பெருமை மிகக் ஆலயம் இதுவாகும். பக்திச் சிறப்பாலும், பண்பாட்டுப் பெருமையினாலும் சிறப்பு மிக்க இடம் காரைநகர் ஆகும். இவ்வூர் மக்களின் அயராத உழைப்பும் பக்தி மேம்பாடும் காரணமாகவே காரைநகர் மண் சிறப்படைந்தது எனலாம்.

இவர்களிடம் காணப்படும் பக்தி உணர்வை நான் நேரில்கண்டு வியந்திருக்கின்றேன். இப்பக்தியின் விளைவாகவே இன்று வாரி வளவு வீநாயகனுக்கு கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்று இன்று சங்காபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடி இருக்கிறது. இப்புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்ட ஆலய அறங்காவலர்கள் அந்தணப் பெருமக்கள், அடியவர்கள் ஆகியோரை வாழ்த்தி வணங்கி ஆசிகூறி அமைகின்றேன்.

தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி
தேவஸ்தானம், தெல்லிப்பழை

கலாநிதி செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி

## வாரிவளவில் சங்காபிஷேகம் எங்கும் விநாயகனின் அருள் வெள்ளம்

வைசமும் தமிழும் சிறந்து வளரும் காரைநகரின் வாரிவளவு கற்பக விநாயகருக்கு இன்று சங்காபிஷேகம் நடைபெறுகின்றது. நான்கு பக்கமும் வாயில்கள் அமைத்து பிரதான வாயில் இராஜகோபுரமும் ஏனைய மூன்று வாயில்களிலும் தனித்தனிக் கோபுரம் அமைத்து பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும் கலையம்சங்களுடன் விளங்கும் கற்பக விநாயகருக்கு சங்காபிஷேகம் இடம்பெறுகின்றது.

1880ம் ஆண்டு மண்கோயிலாக அமைக்கப்பெற்ற இவ்வாலயம் படிப்படியாக கண்ணாம்புக் கட்டாக கற்கோயிலாக வளர்ச்சி பெற்றது. பல வகைச் செல்வங்களும் கொழிக்கும் காரைநகரில் பல ஆலயங்கள் அமைந்திருந்தாலும் சிறப்பான இராஜகோபுரம் முதன் முதல் அமைக்கப்பட்ட பெருமை இவ் ஆலயத்தையே சாரும்.

முன்னர் 1982. 01. 31 திகதி இராஜகோபுர கலச கும்பாபிஷேகம் நடைபெற்றது.

நாட்டின் அசாதாரண நிலை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் குடியமர்ந்த பின்னர் விநாயகருக்கு நவீன கலையம்சங்களுடன் நான்கு கோபுரம் அமைத்து மகிழ்கின்றனர். இலங்கையிலேயே முதன்முதல் நான்கு கோபுரம் கொண்ட பெருமையையும் உடைய இவ் ஆலயத்தின் தேர் தேக்க மரத்திலான சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டது. இச் சிற்பங்கள் அனைத்தும் ஆய்வுகளிற்கு உட்படக்கூடிய வரலாறு கொண்டிருப்பது பெருமைக்குரியதே.

சைவ சமய முறைப்படி ஆகம விதிகளை உள்ளடக்கி புராதன கலையம்சங்களை நவீன முறையில் வடித்துள்ளனர். இதனால் சைவசமய தத்துவங்களைப் பாதுகாத்த பெருமையை இவ்வாலயத்தினர் பெறுவதோடு இதனை இளம் சமுதாயத்தினருக்கு அர்ப்பணித்துள்ளனர். அத்துடன் காரைநகரிலிருந்து பல்கலைக்கழகம் செல்லும் வறிய மாணவர்களுக்கும் புலமைப் பரிசில் திட்டத்தினையும் ஆலயம் நடைமுறைப்படுத்தவுள்ளது. சமயப் பணியுடன் கலைப்பணி மற்றும் சமூகப் பணிகளையும் ஆலயம் செய்வது போற்றுதற்குரியது. இஃது ஈழத்தில் உள்ள ஏனைய ஆலயங்களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஆலயத்தின் கட்டட சிற்பவேலைகளை உள்ளூர் கலைஞர்களும் தென்னிந்திய சிற்பாசாரியார்களும் சிறப்பாக மேற்கொண்டுள்ளனர். வாரி வளவன் வாரி வழங்கிய செல்வங்களை விநாயகரின் திருப்பணிக்காக அர்ப்பணித்தவர்கள் சரீர உதவிபுரிந்தவர்கள் அனைவரும் அவரின் அருட்கடாட்சத்திற்கு உரியவர்கள். இதனை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்திய நிர்வாகி காலத்தின் கண் போற்றப்பட வேண்டியவர்.

திருப்பணி ஆகிய பெரும் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் இன்றைய சங்காபிஷேக திருநாளில் விநாயகரின் அருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக!

**கொம்பன்** வாரிவளவு, காரைநகர்.

## ஆலய நிர்வாகம

1991ம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் கா
எண்ணமெல்லாம் எமது கற்பக வினாயகனுக்கு
நடைபெறும், நாங்களும் அடுத்த கும்பாபிஷேக
என்பதே! ஆம் அவர்களின் பிரார்த்தனை வீ
தீர்மானத்திற்கு அமைய ஆலயம் சிறப்பாக
கோபுரங்களுடன் எழில்மிகு கலைக்கோவிலாக வி
சிறப்பாக நடைபெற்றது.

பல்லாயிரக் கணக்கான மக்கள் நாட்டின் பல
தந்து இக்காட்சியைக் கண்டு தங்கள் திரு
சிவத்தொண்டுஎன்பதனை நாங்கள் நன்கு உ
மண்டலாபிஷேகம் நடைபெற்று இன்று (20.03.20
சிவாச்சாரியார்களின் தலைமையில் நடைபெறுகி
நவோத்தர சஹஸ்ர கலச சங்காபிஷேகமாக நடை

ஆலய இப் புனருத்தாரணத்திற்காக எமக்கு
வழங்கியவர்களிற்கும், கற்பக விநாயகப்
கிருயைகளின்போது உபயகாரர்களாக இருந்த அ
என்று பிரார்த்திப்பதோடு வருங்காலத்திலும் இவ்
வணங்கி விடைபெறுகின்றேன்.

மலர் அமைப்பு: [...]ரைநகர் [...]தியா


**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம்**
இல. 303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2670, Fax:- 021 222 3214
E-mail:- del.sms.kr.@Eureka.lk

**திரு முருகன் கொம் நெற்**
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
T.P:- 021 222 7310, 021 222 7555, 021 222 7560
Fax:- 021 222 7310
E.mail:- Thirumurugan @ Eudra mail

இ.
இல


**கணேசன் ஸ்ரோர்ஸ்**
இல. 201 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்**
இல. 41, பெரியகடைண,
யாழ்ப்பாணம்.
T.P. 222 2063



**கணேசன் ரேட் சென்ரர்**
இல.19 பிரதான வீதி,
பண்டாரவளை.
T.P. 057-2222849

# வு கற்பகவிநாயகர் ஆலய

# காபிஷேக சிறப்பு மலர் - 20.03.2004





புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று இராஜகோபுரங்கள்

## ஆலயப்பிரதமகுருவின்



"புவனியில் போய்ப் பிறவாமையினால் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு"

எனத் தேவர்கள் வருந்துவதாக மாணிக்க வாசகரும் கூறியுள்ளமை கவனிக்கத் தக்கது. இப்படிப்பட்ட அவனியில் பிறந்த நாங்கள் எம்பெருமாள் கற்பகவிநாயகர்" காரைநகரில் உள்ள வாரிவளவு சோத்திரத்தில் அடியார்களுக்கு அருள்பாலித்த வண்ணம் உள்ளனர்.

எம்பெருமானுக்கு குடமுழுக்கு நடைபெற்று 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று கடைசி தினமாகிய இன்று 1008 கலச சங்காபிஷேகம் நடைபெறுகின்றது. இவ்வேளையில் மாணிக்க வாசகரின் இக்கூற்றுக்கிணங்க இந்த அவனியில் பிறந்த பெரும் பேற்றை உங்கள் இரு கண்களால் அபிஷேகத்தைக் கண்டுகொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன். இப்பெருவிழாவில் கலந்துகொண்ட யாவர்க்கும் இறையருள் கிடைக்க ஆசி கூறுகின்றேன்.

ஆலய பிரதமகுரு
நா.ஹரீந்திரக்குருக்கள்

## நிர்வாகஸ்தரின் பார்வையில்...

டப்பெயர்வின் பின்னர் காரைநகர் மக்கள் குறியாக வாரிவளவைச் சேர்ந்தவர்களின் கற்பக வினாயகனுக்கு எப்போது பூசை நடக்கும், எப்போது ஆலய புனருத்தாரணம் ம் அடுத்த கும்பாபிஷேகத்தை சாகுமுன் காணும் திருவருட் கடாட்சம் கிடைக்குமா களின் பிரார்த்தனை வீண்போகவில்லை. மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி எடுத்த ய ஆலயம் சிறப்பாக புனருத்தாரணம் செய்யப்பட்டு இன்று நான்கு பக்கமும் மிகு கலைக்கோவிலாக விளங்கும் ஆலயத்தில் 01.02.2004 மஹாகும்பாபிஷேகம் மிகவும்

கான மக்கள் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஏன் பிறதேசங்களில் இருந்தும் வருகை கண்டு தங்கள் திருப்தியை எம்மிடம் தெரிவித்தபோது எமது தொண்டு ஒரு னை நாங்கள் நன்கு உணர்ந்தோம். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் டபெற்று இன்று (20.03.2004) மண்டலாபிஷேக பூர்த்தி வட இலங்கையின் தலைசிறந்த தலைமையில் நடைபெறுகின்றது. இவ் மண்டலாபிஷேக பூர்த்தி பஞ்ச குண்ட பசஷ ச சங்காபிஷேகமாக நடைபெறுகின்றது.

த்தாரணத்திற்காக எமக்கு அறிவுரைகளும் சரீர உதவிகளும், பொருள் உதவிகள் கற்பக விநாயகப் பெருமானின் யந்திர, கும்பாபிஷேக, மண்டலாபிஷேக பயகாரர்களாக இருந்த அனைவரிற்கும் கற்பக விநாயகனின் அருள் கிடைக்க வேண்டும் டு வருங்காலத்திலும் இவ் ஆலய வளர்ச்சிக்கு மேலும் உதவவேண்டும் எனக்கேட்டு ன்றேன்.

ஆலய நிர்வாகஸ்தர்
கற்பக விநாயகர் ஆலயம்,
வாரிவளவு, காரைநகர்

மப்பு: ரைநகர் தியாளர்

## யாழ். வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



மழலை வயதில் விரல்களுக்குள் நுழைந்து தமிழ் அகரத்தை எழுதவைத்த கற்பகவிநாயகர் இளமையும் எழிலும் நிறைந்தவர். பாடசாலைக் காலத்தில் தோப்புக்கரணம் போட்டவர்களுக்குக் கல்வியை அள்ளிக் கொட்டினார். பதவிகள், உயர்வுகள், பரிசுகள் அளித்தார். முதுமை நெருங்கும் காலத்தில் குட்டுப்போட்டவர்களுக்குப் பொற்காசுகளை அள்ளி வழங்கினார். கலியுகத்தில் இந்தக் காட்சிகளை மௌன நிலைக்குள் விழிகள் மூடும் நேரத்தில் தரிசனம் செய்யலாம்.

இந்துசமயத்தின் உச்சநெறிகளைக் காரைநகர் அச்சொட்டாக பின்பற்றுவதனால் இன்று காரைநகர் தெய்வங்களின் அருளால் தேசத்திலே நிமிர்ந்து நிற்கின்றது.

கற்பகப்பிள்ளையார் ஆலயம் அர்ச்சகர்களால், சிற்பிகளால், அடியார்களால் தோகைமயில்போல் வண்ணமாய்க் காட்சியளிக்கின்றது. வானில் பறக்கின்ற குருவிகள்கூட ஓம் என்ற பிரணவ ஒலியை உச்சரித்தே பறக்கின்றன.

அள்ள அள்ளக் குறையாமல் அருள்வழங்கும் கற்பகப் பிள்ளையார் உள்ளத்தில் நுழைந்துவிட்டால் உலகமே காலடியில் கிடக்கும். வாழ்வின் தேடல்களில் வெற்றியும், நாட்டின் செழுமையில் அமைதியும், கற்பகப்பிள்ளையாரைக் கைதொழுது தோப்புக்கரணம் போட்டால் கிடைக்கும்.

இன்றைய சங்காபிஷேகம், கிரியாசக்திகளுடன், இந்து தர்மத்தின் அற்புதங்களை, உலகிற்கு வெளிக்கொண்டு வரவேண்டும். அர்த்தமுள்ள இந்துமதம் காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகரால் பட்சமுடன் வாழ்த்தப்படல்வேண்டும்.

ப. விக்னேஸ்வரன்
வலயக்கல்விப்பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்


நெற்
வேலி

இ. ச. பேரம்பலம் அன் கோ
இல. 50, 52 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

கஜமுகன் காட்வெயர்ஸ்
147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சன்
சென்ரர்
ன வீதி,
ளை.
22849

பிள்ளையார்
ரேட் சென்ரர்
இல.15 பிரதான வீதி,
பண்டாரவளை.
T.P. 057-2222889

ஐங்கரன்
ஏஜன்சி
இல.80 தர்மவியா மாவத்தை
பண்டாரவளை.
T.P. 057-2223539

ரட்னா
ரேட் சென்ரர்
153 ' பிரதான வீதி
பண்டாரவளை.
T.P. 057-2230182

குகனி
ஸ்ரோரிஸ்
180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 2760

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

78

## நான்காம் பகுதி
## முக்குவர் சட்டம்

### 1.மட்டக்களப்பு தேசம்

#### ஐரோப்பியர் ஆட்சியில் வன்னிபப் பதவி

1939 ஆம் ஆண்டிலே கிழக்கு மாகாணத்திலே பதவியில் இருந்த வன்னிபங்கள் பற்றிய விபரங்கள் மேல்வருமாறுள்ளன.

திருகோணமலை நகரம் - T. சரணமுத்து, தம்பலகாமம்பற்று -A. கனகசிங்கம், கட்டுக்குளம்பற்று - M.இராசையா, கொட்டியாரம்பற்று - T. சங்கரப்பிள்ளை, மண்முனை தெற்கு எருவில் - போரதீவு பற்று - வேல்முருகு முதலியார் பொன்னுச்சாமி, மண்முனை வடக்கு மட்டக்களபபு நகரம் - சின்னப்பு நமசிவாயம், கரவாகுபற்று - M.S.காரியப்பர், சம்மாந்துறை பற்று - மீரா லெவ்வை முகமது அலி, அக்கறைப்பற்று C.C. கனகரத்தினம் பாணமைப்பற்று - அகமது லெவ்வை சின்னலெவ்வை.

#### சமூகப் பிரிவுகளும் வழமைகளும்

மட்டக்களப்புத் தமிழரின் சமுதாய மரபுகள் ஒல்லாந்தரின் ஆட்சி ஏற்படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வரையறையாகி விட்டன. காலிங்க மன்னனான மாகோனாற் சமுதாயப் பிரிவுகளும் சமூக வழமைகளும் வரையறை செய்யப்பட்டன என்பது அங்குள்ள நீண்ட காலத்து ஐதீகமாகும். மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் உள்ள பாடல்கள் அந்தக்கதையை வலியுறுத்துகின்றன. அந்தக் கதையின் தாரதம்மியங்களை இங்கு விளக்கி விமர்சிக்கவியலாது. அது வேறு சந்தர்ப்பத்தில் நோக்கப்படவேண்டிய ஒன்றாகும் ஆயினும், மட்டக்களப்புத் தமிழரின் சமூக - பண்பாட்டு வரலாற்றிலே மாகோன் என்று சொல்லப்படும் காலிங்க மாகனுடைய ஆட்சிக்காலம் ஒரு பிரதானமான கால கட்டம் என்பதை மறுக்க முடியாது. அது பல சமூக மாற்றங்கள் ஏற்பட்டவொரு கால கட்டமாகும். கேரளத்தில் இருந்தும் புதிதாக வந்து சேர்ந்த படைப்பிரிவினரும் அவர்களோரு கூடியவர்களும் பிராந்தியத்திலே ஆட்சி அதிகாரம் பெற்றனர். அவர்களுக்கு வழங்கிய நிலமானியங்களின் மூலமாக நில போக முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. மருமக்கள் தாயகமுறையின் அடிப்படையில் உருவான சமூக வழமைகள் உருப்பெற்றன. சாதியாசாரங்களும் சமுதாய அமைப்பும் மாற்று வடிவம் பெற்றன. எனவே மாகோனைப் பற்றிக் கூறப்படும் மரபுவழியான கருத்துக்கள் இத்தகைய மாற்றங்களை பிரதிபலிப்பனவாய் அமைந்துள்ளன என்று கொள்ளலாம்.

இலங்கைத் தமிழரின் வரலாற்று அம்சங்களை விபரிக்கும் நூல்களில் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் மட்டுமே சமகால நிலைகளின் அடிப்படையில் சமூகப் பிரிவுகளைப் பற்றியும் சமூக வழமைகளைப்பற்றியும் குறிப்பிடுகின்றது. அப்பிராந்தியத்திலே காணப்பெற்ற எல்லாச் சாதிப் பிரிவுகளையும் அவற்றின் மரபுவழியான கடமைகளையும் அவற்றுக்குரிய விருதுகளையும் அந்நூல் குறிப்பிடுகின்றமை கவனித்தற்குரிய ஒன்றாகும். மேலும், மட்டக்களப்புச் சமுதாயத் திற்குச் சிறப்பாகவுள்ள குடிமுறை பற்றியும் அதிலே விபரங்கள் உள்ளன. அதிலே கூறப்படும் விபரங்களும் தேசத்து வழமைகளை அடிப்படையாகக் கொண்டவை. இவ் விபரங்கள் பெரும் பான்மையும் ஒல்லாந்தர்கால ஆவணங்கள் மூலமாகவும் பிற ஏதுக்களாலும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

#### சாதிப் பிரிவுகள்

பங்கு கூறும் கல்வெட்டு என்னும் பாடலில் மேல்வரும் சாதிப்பிரிவுகள் கூறப்படுகின்றன.

அத்தணர், வெள்ளாளர், மாதுலர், கோயிலார், பண்டாரப்பிள்ளை, குசவர், கொல்லர், கோனார், தொழுவர், முதலி, செக்கன், (வாணியர்), சாணான், ஈரங்கொல்லி, ஈட்டியன், பள்ளர், வாரந்தட்டி, மாலைக்காரர், கடையர், துரும்பர், செட்டிகள்.

மட்டக்களப்பு பூர்வசரித்திரத்தில் உள்ள வேறு பாடற் பகுதிகளிலே முக்குவர், கரையார், வேடுவர், நளவர், சேணியர், தட்டார், சீர்பாதங்காரர், வண்ணார், அம்பட்டர் என்னும் சாதிப் பிரிவுகள் கூறப்படுகின்றன. சங்கமக் குருக்கள் என்ற வகுப்பார் சமுதாய அமைப்பிலே முக்கியமானவொரு நிலையினைக் கொண்டுள்ள போதிலும் அவர்களைப்பற்றிய குறிப்பெதுவும் இல்லை. அந் நூலில் இடம்பெறும் பாடல்கள் எல்லாம் சமுதாயத்திலே மேலாண்மை செலுத்திய முக்குவரோடும் வெள்ளாளரோடுந் தொடர்புடையவை. குருக்கள் என்னும் சாதியார் கோயிலோடு பந்தமானவர்கள். சமூக சேவைகளையும் ஆலயத்தொழும்புகளையும் பொறுத்த வரையில் சங்கிலிப்பிணைப்பாக அமைந்துள்ள சாதிப் பிரிவுகளின் பந்தங்களிற் சேராதவர்கள் என்ற காரணத்தினால் சாதிகளைக் குறிப்பிடும் மரபுவழியான பட்டியல்களிலே குருக்கள் என்போரைச் சேர்க்க வேண்டிய தேவை ஏற்படவில்லை என்று கருதலாம்.

#### குலவிருதுகள்

முற்காலங்களிலே சமுதாயப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக குல விருதுகளும் சின்னங்களும் இருந்தன. ஏரெழுபது, ஈட்டியெழுபது, வன்னியர் புராணம், வலைவீசு புராணம் முதலிய நூல்களிலே அவற்றின் உற்பத்தி பற்றிய பௌராணிக ரீதியிலான கதைகள் உண்டு. மட்டக்களப்பில் உள்ள பிரதானமான சமூகப் பிரிவுகளின் குலவிருதுகளைப் பற்றி மேல்வரும் பாடல் காணப்படுகின்றது.

'தோணி கரையார்க்குத் தொப்பி துலுக்கருக்கு
காணியுழுமேழி களிகாரளருக்கு
நாணி வில்லம்பு நாட்டிலுள்ள வேடுவர்க்கு
எழுத்தாணி சுறி முற்குகர்க்கு கமலமலர் கோயிலார்க்கு
கைப்பிரம்பு பண்டாரப்பிள்ளைக்கு திமிலருக்குப் பால்முட்டி
சேணியர்க்கு நூல் அச்சு அமலருக்குக்குத் தேர்க்கொடிகள்
அம்பட்டருக்குக் கத்தரிக்கோல் விமலருக்கு மத்து
வேதியர்க்குப் பூணூலாம்.
வண்ணார்க்குக் கல்லு வாணிபர்க்கு செக்கு
சுண்ணாம்பு சுடும் கடையருக்குக் கூடையாம் - தொல்லுலகில்
வேந்தர்க்குச் செங்கோள் மேளமது வள்ளுவர்க்கு
சேந்த குயவருக்குக் கும்பக்குடம் செப்புவேன் இன்னும்
தட்டார்க்குக் குறடு சாணாக்குக் கத்தி
செட்டி குலத்தோர்க்குத் தோடு தராசுபடி
திட்டமுடன் இந்த விதிப்படிக்கு எல்லாம் விருதெனவே
பட்டமது கட்டிவைத்தான் பாண்டிமன்னன்"

#### குடிப்பிரிவுகள்

சாதிகள் ஒவ்வொன்றும் குடியென்னும் பிரிவுகளைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு சாதியிலும் குடியென வழங்கும் ஏழு பிரிவுகள் அமைந்திருப்பது பொதுவான வழமை. சில சமயங்களில் ஏழிலுங் குறைவான குடிகள் இருப்பதுண்டு. குமுறையானது தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவான அம்சம் என்பதும் கவனிதற்குரியது. குடிப் பெயர்களிலுஞ் சில இரு சமூகங்களுக்கும் பொதுவானவை. தமிழரிடையே அமைந்துள்ள குடிப்பிரிவுகள் மேல்வருவனவாகும்.

(தொடரும்)

# மின்சார சபை ஊழியர்கள் ஒருநாள் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த தொழிற் சங்க கூட்டமைப்பின் அங்கத்தவர்கள் நேற்று முன்தினம் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டார்கள்.

3 கோரிக்கைகளை முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்த வேலை நிறுத்தத்தில் 24 தொழிற்சங்க அமைப்புக்கள் இணைந்திருந்தன.

'2003 ஆம் ஆண்டுக்கான சம்பள அதிகரிப்பை உடன் வழங்க வேண்டும்' 'நிறைவேற்றுத் தரத்தில் உள்ளோருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு எமக்கும் வழங்க வேண்டும்' 'சம்பள ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்படவேண்டும்' ஆகிய 3 கோரிக்கைகளையும் முன்வைத்து இந்தப போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, இலங்கை மின்சார சபை ஊழியர்களின் சம்பள ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்கென திறைசேரி குழுவொன்றை நியமித்துள்ளதாக மின் சக்தி எரிபொருள அமைச்சு அறிவித்துள்ளது.


தற்போதைய காபந்து அரசாங்கத்தன் கீழ் சம்பள அதிகரிப்பை அங்கீகரிக்க முடியாது எனவும் அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (தி-60,10)

## குடிநீர் விநியோகம்

(ஊர்காவற்றுறை)

கரம்பொன், தம்பாட்டி பகுதிகளுக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில உள்ள இவ்விடங்களின குடிநீர்த் தேவையினை நிவர்த்தி செய்யுமுக மாக குழாய்மூலம் குடிநீர் விநி யோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. (து-75)



மக்கள் சமாதான முன்னணியால் அண்மையில் நடாத்தப்பட்ட 'சமாதானம்' பற்றிய எண்ணக்கருவுலங்களைக் கொண்ட சிறந்த படைப்புக்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில், தமிழ்ப் படைப்புக்கான பரிசினை 'பிளிற்' நிறுவனத் தேசியக் கூட்டிணைப்பாளர் கலாநிதி சுமண ஸ்ரீ.லியனகே, ஹுணுகலவைச் சேர்ந்த செல்வி.பாத்திமா இஸ்மாயிலுக்கு வழங்குவதையும்,



சிங்களப் படைப்புக்ரான பரிசினை 'பவ்ரல்' நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.கிங்ஸ்லி ரொட்ரிக்கோ, கிங்குராங்கொடையைச் சேர்ந்த செல்வி.ஜி.சமந்த பிரசாந்திக்கு வழங்குவதையும், அருகில் மக்கள் சமாதான முன்னணியின் இணைச் செயலாளர் எஸ்.செல்வேந்திரனையும் படங்களில் காணலாம்.

(படங்கள் பரு.திருபர்)



அண்மையில் இடம்பெற்ற நல்லூர் ஆனந்த வித்தியாசாலை விளையாட்டுப் போட்டி நிகழ்வில், விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வு பெற்ற உதவி அரச அதிபர் கா.பீதாம்பரம், யாழ்.வலயக்கல்விப் பிரதிப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன், ஓய்வுபெற்ற அதிபர் சி.கணபதிப்பிள்ளை மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் க.சிவஞானம் ஆகியோருடன் வித்தியாலய அதிபர் ஆ.சிவராசா அருகில் நிற்பதனைப் படத்தில் காணலாம்.

# செய்தித் துளிகள்

## செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக்கல்விப் பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விஞ்ஞானமும், தொழிநுட்பவியலும் விசேட செய்திட்ட செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது.

தரம் 9,10,11இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு என நாளை நடைபெறவிருந்த இச் செயலமர்வு, எதிர்வரும் 27ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டிருப்பதாக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர். இருதய நாதன் அறிவித்துள்ளார். (தி-4)

## சைக்கிள் திருட்டு

(பருத்தித்துறை)

வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் இரவு வேளையில் திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புலோலி கிழக்கு சாரையடியில் வசிக்கும் வடிவேலு மதிபாலன் என்பவரது வீட்டிலேயே இச் சைக்கிள் திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (தி-52)

## அலங்கார உற்சவம்

பருத்தித்துறை)

பருத்தித்துறை மருதடி ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இவ்வாலயத்தின் தீர்த்த உற்சவம் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (தி-52)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பாடசாலை அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சின் இளைப்பாறிய மாகாண கல்விப்பணிப்பாளர் கே.கந்தசாமி பிரதமவிருந்தினராகக்கலந்து கொள்ளவுள்ளார். (தி-52)

## கலந்துரையாடல்

(தனங்கிளப்பு)

தென்மராட்சிக் கல்விவலயத்திலுள்ள முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட அனைவரையும் குறித்த நேரத்தில் சமுகம் தருமாறு தென்மராட்சி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் சு.பாக்கியராஜா அறிவித்துள்ளார். (தி-37)

## பனையியல் அறிமுக விழா

(மட்டுவில்)

முன்னாள் பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் மு.பாக்கியநாதனின் "பனையியல்" நூல்அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10மணிக்கு வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

எஸ்.சாந்தநாதன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி பிரதம விருந்தினராகவும்,யாழ்.மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் அருள், கூட்டுறவுப் பொறுப்பாளர் இலங்கன், கூட்டமைப்புவேட்பாளர் கி. சிவனேசன் மற்றும் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் குட்டித் தம்பி ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும்கலந்துகொள்ளவுள்ளனர்.

நூல் திறனாய்வினை யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை ஆற்றவுள்ளார்.(115)

## இந்துசமய 132வதுபேருரை

(கொழும்பு)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து மாதாந்தம் நடத்தி வரும் இந்து சமய பேருரை தொடரின் 132வது சொற்பொழிவு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்குகொழும்பு விவேகானத்தா சபை மண்டபத்தில் இந்து சமய விவகார அலுவல்கள் அமைசசின் செயலாளர் க .பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெறள்ளது.

இந் நிகழ்வின் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். பிரந்திய அலுவல்க உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் "குறள் காட்டும் வாழ்க்கை நெறி" எனும் பொருளில பேருரை நிகழ்த்தவுள்ளார். (உ)

## அபிவிருத்தித் திட்டம்

(வவுனியா)

டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதி உதவியுடன் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினால் புளியங்குளம் தெற்கு கிராம அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கான பயனாளிகளைத் தெரிவு செய்தல், திட்ட மதிப்பீடுகள் என்பன தற்பொழுது இடம்பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் மேற்படி கிராமத்தில் வீதிப் புனரமைப்பு குடிநீர் விநியோகம் சுழற்சி முறைக் கடன்கள் வழங்கல், கல்வி அபிவிருத்தி என்பன நடைமுறைப்படுத்தப் படவுள்ளன. (உ-4)

## இறுதி ஆட்டங்கள்

அரியாலை 85வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வருகின்ற முன்னோடி விளையாட்டுப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப2.00 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளன.

இந்த வகையில் உள்ளூர் மட்ட 16 வயதின் கீழ்ப்பிரிவு கிரிக்கெற் போட்டியில் போய்ஸ் வி.க. எதிர் ஜங்ஸ்ரார் வி.கவும்,

மாவட்டமட்ட கிரிக்கெற் போட்டியில் போத்ஸ்ரார் வி.க எதிர் பஷன் வி.கவும்,

திணைக்களங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் மாவட்ட விளையாட்டுத் திணைக்களம் எதிர் மாநகரசபைவிகவும்,உள்ளூர மாவட்ட கரபந்தாட்டப் போட்டியில்" அரியாலை ச.ச.நிலைய 'ஏ' அணி எதிர் அரியாலை ச.ச.நிலைய பி" அணியும் , மாவட்ட மட்ட கரபந்தாட்டப் போட்டியில் கே.கே .எஸ் வி.க. எதிர் ஆவரங்கால் மத்தி வி.கவும் மோதவுள்ளன.(உ)

## குளிர்த்தி விழா

(தொல்புரம்)

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் ஆலய திருக்குளிர்த்திப் பெருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (தி-70)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் ஜி.ரி.சற் நிறுவனத்தின் உதவியுடன்அமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழாவும் தளபாடங்கள் கையேற்றல் நிகழ்வும் எதிர்வரும் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10.30.மணிக்கு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ்.சண்முககுமார் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில், யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும்பொறியியலாளர்களான கு.சிவபாலன், யோ.தயாபரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர் (உ-3)

## புத்தக அறிமுக அரங்கு

(யாழ்ப்பாணம்)

சி.கா.செந்திவேல் எழுதிய "வட புலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்" புத்தக அறிமுக அரங்கு இன்று சனிக்கிழமை மாலை6மணிக்கு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் அமரர் ஆறுமுகம் கந்தசாமி ஞாபகார்த்த கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நூல் அறிமுகவுரையை சட்டத்தரணி சோ.தேவராஜா ஆற்றவுள்ளார். (உ-18)

## செயலமர்வு

(பொன்னாலை)

தீவகவலயத்தைச்சேர்ந்த பாடசாலைகளில் சமூகக் கல்வி மற்றும்ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு"கண்ணிவெடி அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பது எப்படி என்பது தொடர்பான செயலமர்வு ஒன்று யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையோடு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வகையில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் வேலணைக் கோட்டத்திற்கும் எதிர்வரும் 27,28ம் திகதிகளில் நெடுந்தீவுக் கோட்டத்திற்கும் இச்செயலமர்வு நடாத்தப்படவுள்ளது. (உ-49)

## குருபூஜை விழா

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் நல்லை குருமணிஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 23வது குருபூஜை விழா அனுஷ்டிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 29ம்திகதி மு.ப. 10மணிக்கு நல்லூரில்உள்ள சுவாமிநாதரின் குருமூர்த்த நினைவாலயத்தில் இடம்பெறும் இவ்விழாவில் விசேடபூஜைகளும் ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன. (உ-3)

## மரநிழலில் சிகிச்சை

(கிளிநொச்சி)

கிளிநெச்சி இராமநாதபுரம் மாவடி தாய்சேய் சிகிச்சை நிலையம் கடத்த கால போர் அனர்த்தங்களால் அழிவடைந்து இருப்பதால் தாய் சேய் சிகிச்சை மரநிழலின் கீழ் இடம் பெற்று வருகின்றது. (உ-39)

## பொதுமக்கள் நிதி உதவி

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திக்கு தொடர்ந்தும் மக்களின் நிதி உதவிகள் கிடைத்து வருவதாக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி மயிலேறும்பெருமாள் தெரிவித்துள்ளார்,

அந்த அடிப்படையில் இற்றைவரை அப்பகுதிமக்களால் 3லட்சத்து 30ஆயிரம் ரூபா நிதி அன்பளிப்பு செய்யப்படடுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (உ-52)

## கற்றல் உபகரணம் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சாரணர் இயக்க மாணவாகள் சாரணிய ஜனாதிபதி விருதுத் திட்டத்தின் கீழ் வட-இலங்கை ஸ்ரீபராமானந்தா ஆச்சிரம சிறுவர் முதியோர் இல்லத்தில் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் உணவுப் பொட்டலங்களை வழங்கினர்.

கல்லூரி அதிபர் என்.பதமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆச்சிரம அறங்காவல் சபையினர் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (கி-52)

## ஆந்திராவில் நக்சலைட்டுகள் வன்முறை

ஆந்திர மாநில பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மணிகுமாரியன் கணவர் வெங்கட்ராஜுவை மக்கள் யுத்தக் குழு நக்சலைட்டுக்கள் சுட்டுக் கொன்றுள்ளனர்.

விசாகப்பட்டினத்திலுள்ள அவரது வீட்டுக்குள் நேற்று முன்தினம் காலை புகுந்த நச்சலைட்டுக்கள் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டதில் வெங்கட்ராஜு அந்த இடத்திலேயே உயிரிழந்தார். கொலையாளிகளைத் தேடும்பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந் நிலையில் கல்கொண்டா மாவட்டத்தில் தெலுங்கு தேசம் கட்சி நிர்வாகி ஒருவர் இரண்டு சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த போது தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதனிடையே நேற்று முன்தினம் இரவு ஆந்திரா - ஒரிஸா மாநில எல்லைக்குள்ளே சர்நிபுத் ரயில் நிலையத்தை நக்சலைட்டுக்கள் வெடிகுண்டு வைத்துத் தகர்த்துள்ளனர். இதில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (து)

## அத்வானியின் ரத யாத்திரை

ரத யாத்திரை செல்வதற்கு அரசியல் சட்டத்தில் கட்டுப்பாடு ஏதும் விதிக்கப்படவில்லை என்று உச்சநீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது.

துணைப் பிரதமர் அத்வானி மேற்கொண்டுள்ள ரத யாத்திரைக்குத் தடைவிதிக்கக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு தலைமை நீதிபதி வி.எஸ்.காரே தலைமையிலான நீதிபதிகள் குழு முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரும் தமது நாட்டுக்குள் எங்கு வேண்டுமானாலும் சுதந்திரமாகக் சென்று வர அரசியல் சட்டம் அனுமதி அளிக்கிறது என்று குறிப்பிட்ட நீதிபதிகள், மனுதாரர் விரும்பினால் ரத யாத்திரைக்கோ வேறு எந்த யாத்திரைக்கோ செல்லலாம், அதை யாரும் தடுக்கமாட்டார்கள் என்று தெரிவித்தார்கள்.

இருப்பினும் இந்த மனுவை வருகிற மாதம் 7 ஆம் திகதிக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக நீதிபதிகள் கூறினர். (து)

## கணவன் இறந்த துக்கத்தில் உடன் கட்டை

கணவன் இறந்த துக்கத்தைத் தாங்க முடியாமல் அவரது 65 வயதுடைய மனைவி எரிந்து கொண்டிருந்த அவரது சிதையில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம் பீகார் மாநிலத்தில் சமஸ்டிப் பூர் என்ற மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இத் தகவலை இறந்துவரது மகனும் கிராமத்தவர்களும் தெரிவித்தார்கள்.

சர்திகா கிராமத்தைச் சேர்ந்த ரகு யாதவ் 70 வயது முதியவர் நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்து கடந்த புதன் கிழமை மரணமடைந்தார்.

கணவன் இறந்த துக்கத்தைத் தாக்கமுடியாத அவரது மனைவியான ருக்யா தேவி என்ற 65 வயது மூதாட்டி சுடுகாட்டுக்குச் சென்று எரிந்து கொண்டிருந்த கணவரின் சிதையில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டார் என அவரது மகன் ஜகதீஸ் ஜாதவும் கிராமத்தவர்கள் சிலரும் தெரிவித்தனர்.

ருகயா தேவி தனது உடலில் மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு எரிந்து கொண்டிருந்த கணவர் சிதையில் குதித்துத் தற்கொலை செய்துகொண்டதாக வேறுசிலர் தெரிவித்துள்ளனர்.

இதனை மறுத்த பொலிஸ் கண்காணிப்பாளர் மேகநாத் ராம், கணவர் இறந்த துக்கத்தில் மாரடைப்பு ஏற்பட்டு ருக்யா தேவி இறந்தார் என்றும் இச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தப் பொலிஸுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் கூறினார். (து)



புதுவை அரசை இராஜினாமாச் செய்யக்கோரி பா.ஜ.க. உறுப்பினர்கள் புதுவை சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்புச் செய்யும் காட்சி.



ஜம்மு காஷ்மீரில் அமைந்துள்ள ஏரியில் படகில் சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்வதைக் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## மூன்று நண்பர்கள்

ஒரு ஊரில் ஒரு ஆள் இருந்தான். அவன் மீது ஏதோஒரு குற்றச்சாட்டு. அதனால் அரண்மனையிலிருந்து அழைப்பு வந்தது "உன்னை விசாரிக்க வேண்டியுள்ளது. அதனால் அரண்மனை விசாரணை மண்டபத்திற்கு வநதுசேர்" என்பதே அந்த ஆணை. என்மீது எந்தப்பிழையும் இல்லையே நான் ஒரு தவறும் செய்யவில்லையே என்று நினைத்தான். இருந்தாலும் அரசாங்க உத்தரவு அதை அலட்சியம் செய்ய முடியுமா? போகத்தான் வேண்டும்.

தனியாகச் செல்வதற்கு அவனுக்குத் தயக்கமாக இருந்தது. தன்னுடன் யாராவது வந்து வாதாடினால் பரவாயில்லை என்று நினைத்தான். யாரை அழைத்துக்கொண்டு போகலாம் என்று நினைத்தான். அவனுக்கு மூன்று நண்பர்கள் இருந்தார்கள். அதனால் அவர்களில் ஒருவரை அழைத்துக்கொண்டு போகலாம் என்று முடிவு செய்து கொண்டு நெருங்கிய ஒரு நண்பனிடம் சென்றான். "என்னை விசாரிப்பதற்காக அரண்மனைக்கு வரும்படி ஆணை வந்திருக்கிறது. நீ வந்து வாதாடவேண்டும்" என்றான். "என்னால் வரமுடியாது" என்று கூறிவிட்டான் அவன்.

"மிகவும் நெருக்கமாக என்னுடன் பழகியவனே இப்படிக் கூறிவிடடானே" என்று எண்ணி வருத்தப்பட்டான் சரி பரவாயில்லை. இன்னொரு நண்பனிடம் செல்வோம் என்று அவனிடம் போனான். அவன் என்ன சொன்னான் தெரியுமா? அவன் வரமுடியாது என்று கூறவில்லை. "வருகிறேன்! ஆனால் அரண்மனை வாசல் வரைதான் வருவேன். அதற்கு மேல் வரமாட்டேன்" என்றான். "அப்படி அதுவரைக்கும் வந்து என்ன நன்மை. கடைசிமட்டும் என்னுடன் கூடவந்து வாதாடவேண்டுமே" அது தான் முக்கியம் என்று நினைத்தான்.

சரி என்று மூன்றாவது நண்பனிடம் போனான். அதிக நெருக்கமில்லை. அவனுடன் இருந்தாலும் போய் விபரத்தைக் கூறினான். அவன் ஒன்றுமே கூறவில்லை உடனே கிளம்பிவிட்டான் கூடவே வந்தான. ராஜா முன் நின்றான். இவனுக்காக வாதாடிப் பரிந்து பேசினான். விடுதலையும் வாங்கிக்கொடுத்தான். இது ஒரு யு,கக்கதை நண்பர் ஒருவர் என்னிடம் இதைக்கூறினார்.

இந்தக் கதையில் உள்ள உட்கருத்து என்னவென்றால் ஒவ்வொரு மனிதனுக்கும் மூன்று நண்பர்கள் உண்டு முதல் நண்பன் யார்தெரியுமா? பணம். இரண்டாவது நண்பன்யார் தெரியுமா? சொந்தம். மூன்றாவது நண்பன் அவன் செய்த நற்செயல்கள் பணம் கூடவே வராது சொந்தம் கல்லறை மட்டுமேவரும். நற்செயல்கள் தான் கூடவேவரும். அதாவது நமக்குப்பின்னாலும் நம்மைப் பற்றிச் சொல்லிக் கொண்டே இருக்கும். மனிதன் என்பவன் எப்போதும் நல்லசெயல்களைச் செய்யவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதற்காகக் கூறப்பட்டகதை இது.

நமது ஆள் ஒருவன் சிக்கலில் மாட்டிக் கொண்டான்.. ஒரு சைக்கிளைத் திருடிவிட்டதாக அவன் மீது வழக்கு. ஒரு நண்பனைத்தேடிப் போனான். "எனக்குச் சாதகமாகச் சாட்சி கூறவரவேண்டும்" என்று கூப்பிட்டான். அவன் மறுத்து விட்டான். "இதோ பார் உனக்குச் சாதகமாக சாட்சிகூற முடியாத நிலையில் நான் இருக்கின்றேன். அதற்கு மூன்று காரணங்கள் முதல் காரணம் எனக்குப் பொய்ச்சாட்சி கூறிப் பழக்கமில்லை. இரண்டாவது காரணம்பொய்ச்சாட்சி கூறுவது தவறு என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். மூன்றாவது நீ திருடிக் கொண்டு போனசைக்கிள் என்னுடையது தான்" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கண்ணிவெடி ஆபத்துக் குறித்து ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு

(கொழும்பு)

கண்ணிவெடிகளினால் ஏற்படும் உயிர் ஆபத்துக்கள் தொடர்பாகப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும செயற்றிட்டம் ஒன்றைத் தேசிய கல்வி நிறுவகம் அமுல் செய்துள்ளது.

6 வருட காலத்திற்கு தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த செயற்றிட்டத்திற்கு யுனிசெவ் நிறுவனம் நிதியுதவியுடன் கூடிய முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

இந்த செயற்றிட்டத்தின் முதல் கட்ட நடவடிக்கையாக மிதிவெடிகளினால் ஏற்படும் அபாயம் குறித்து தொடர்ச்சியாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 கல்வி வலயங்களில் செயலமர்வுகள் இடம் பெற்றுவருகின்றன.

அதன் பின்னர் நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் இந்தத் திட்டம் கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (உ-61,10)

# அரச ஊடகங்கள் நடுநிலையோடு செயற்பட வழிவகை செய்ய வேண்டும்

## தேர்தல் ஆணையாளருக்கு பீரிஸ் பரிந்துரை

(கொழும்பு)

அரசாங்க ஊடகங்களுக்குத் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு ஐக்கிய தேசிய முன்னணி தேர்தல் ஆணையாளரைக் கேட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வகையில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்,

அரச ஊடகங்கள் தொடர்ந்தும் பாரபட்சமாகவே நடந்து கொள்கின்றன எனவே, பக்கச்சார்பற்ற வகையில் நடுநிலையோடு செய்திகளை வெளியிடும் வகையில் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரை அரச ஊடகங்களுக்கு நியமிக்க தேர்தல் ஆணையாளர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதற்கிடையில், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கடன் வழங்கப்பட்ட விவசாயிகளுக்கு கடன் சலுகை வழங்கப்போவதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் காணி அமைச்சர் ராஜித சேனாரத்னாவும் கலந்து கொண்டு கருத்துக் கூறினார்.

தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிரான வகையில் பல தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் ராஜித சேனாரத்னா, இத்தகைய வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கு சில அரசியல் கட்சிகள் பின்னணியில் இருப்பதாகக் குற்றம் சாட்டினார்.



தற்போதுள்ள காபந்து அரசாங்கததின் கீழ் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் அரச ஊழியர் களின் சம்பள முரணபாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதுள்ளதாகவும் ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் அவர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்னா உறுதிபடத் தெரிவித்தார். (உ-61,10)

# தமிழக முகாம்களில் உள்ள மக்களிடம் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள்

(வவுனியா)

தென்னிந்தியாவின் அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறித் தமிழ்ப் பெண்களை சில நபர்கள் அழைத்து வந்து சதி செய்துள்ளனர். இதனால், தமிழ்ப் பெண்கள் மிகவும் பாதிப்புற்று 2 கட்டங்களாக 30 பேர் வவுனியா விடுதலைப் புலிகளின் காரியாலயத்திற்கு வந்து தஞ்சமடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இவர்களுக்கான அடிப்படைத் தேவைகளினைப் பூர்த்தி செய்து கொடுத்தது. அத்துடன் , அந்தப் பெண்களின் விருப்பத்தின்படி உறவினர்களுடன் அவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஆசை வார்த்தைகளினைக் காட்டி எந்தவிதமான ஆவணங்களும் இன்றி, அந்தப் பெண்கள் ஏமாற்றி அழைத்து வரப்பட்டுள்ளதால், அப்பெண்கள் பெரும் சிரமங்களினை எதிர்நோக்கி வருவதால், தென்னிந்திய அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் ஏனைய தமிழ் அகதிகள் மிகவும் அவதானமாக இருக்குமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. (தி-18)

# இராசிபலன்

**20. 03. 2004**

**(பங்குனி 07, சனிக்கிழமை)**

**அமாவாசை பின்னிரவு 4.56 மணி வரை**

**பூரட்டாதி முன்னிரவு 10.31 மணிவரை**

**இராகுகாலம் 9.17-10.47 மணிவரை**

**சுபநேரம் 3.17-4.47 மணிவரை**

**அமாவாசை விரதம்**

**மேடம்**
சினேகிதர் நல்வரவு, குடும்ப நலம், தன தானிய சேர்க்கை, காரிய சித்தி.

**இடபம்**
பிரபுத்தனம், இஷ்டசித்தி, நன்கொடை, மன மகிழ்ச்சி.

**மிதுனம்**
கலகம், எதிர்பாராத செலவு, சரீரப் பிரயாசை, காரிய தாமதம்.

**கடகம்**
அஜீரணக் கோளாறு, பொருள் விரயம், எதிர்பாராத பிரச்சினை, போசன சுகம்.

**சிங்கம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, புதிய முயற்சி, தன லாபம், உறவினர் வருகை.

**கன்னி**
தடைப்பட்ட காரியம் கைகூடும், சத்துரு ஜெயம், புதிய சிந்தை, பிரயாணம்.

**துலாம்**
பணத்தட்டுப்பாடு, சோம்பல் நிலை, காரிய இடையூறு, குடும்பக் கவலை.

**விருச்சிகம்**
தனவிரயம், தன்னம்பிக்கைக் குறைவு, புதிய விடயம், முயற்சி தாமதம்.

**தனுசு**
மனோ தைரியம், பெருமையடைதல், எடுத்த கருமங்கள் கைகூடும், தனலாபம்.

**மகரம்**
அதிக செலவு, போசன சுகக் குறைவு, எந்தக் காரியமும் தாமதமாகும், விவாதம்.

**கும்பம**
வெகுமானம், நல்ல நண்பர்கள் சந்திப்பு, முயற்சி பலிதம், பெருமையடைதல்.

**மீனம்**
கீழ்ப்படிதல், மனக்கிலேசம், காரிய தாமதம், தனவிரயம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**- வளவன்.**

# சுதேச வைத்தியத்தை ஒழிக்க அரசு முயற்சி

## ஆயுள்வேதப் பட்டதாரிகள் அறிக்கை

(கொழும்பு)

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் ஆலோசனைகளைக் கேட்டு சுதேச வைத்தியத்துறை இல்லாதொழிவதற்குரிய வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்தியிருப்பதாக வேலைவாய்ப்பற்ற ஆயுள்வேத மருத்துவப் பட்டதாரிகள் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

இது குறித்து ஆயுள்வேத மருத்துவப் பட்டதாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில், அரச வைத்தியசாலைகளில் மருத்துவர்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டு வரும் அதே சமயம், சுமார் 500 ஆயுள்வேத வைத்தியர்கள் வேலை வாய்ப்புக்காக காத்துக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த 6 வருட காலமாக கல்வி கற்று தாம் பெற்ற அறிவை பொது மக்களின் நலனுக்காகப் பயன்படுத்த ஆவலாக இருந்த போதும், ஆட்சியாளர்கள் தேவையான நடவடிக்கையை எடுக்கத் தவறிவிட்டார்கள் என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-60,10)

# ஹக்கீம் வசமுள்ள வாகனங்களை பறிமுதல் செய்யுமாறு உத்தரவு

## ஜனாதிபதி பிறப்பித்தார்

(கிளிநொச்சி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் கப்பல் துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ரவூப் ஹக்கீம், துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்களைத் தனது தேர்தல் பிரசாரத்துக்காகப் பயன்படுத்தி வருகின்றார் என்று குற்றம் சாட்டியுள்ள ஜனாதிபதி, ரவூப் ஹக்கீமிடம் உள்ள துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான சகல வாகனங்களையும் அநத அதிகாரசபை உடனடியாகப் பறிமுதல செய்யவேண்டும் என துறைமுக அதிகாரசபைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவிற்கு ஏற்கனவே தான் உத்தரவு பிறப்பித்த போதும் பொஸில்மா அதிபர் தனது உத்தரவை அலட்சியம் செய்து விட்டார் எனவும் ஜனாகிபகி சுட்டிக்காட்டியள்ளார். (உ-64.10)

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். - குறள்

வலம்புரி

## ஜனாதிபதி சந்திரிகா சொல்வதைச் செய்வாரா?

மட்டு. - அம்பாறை மாவட்டத்தின் சிறப்பு தளபதியாக இருந்த கேணல் கருணா தன்னுடன் தொடர்பை ஏற்படுத்த முயற்சித்ததாகவும் எனினும் தான் அத்தகையதொரு திரைமறைவான தொடர்பை ஏற்படுத்தி கொள்ளவிரும்பவில்லை எனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கும், கருணாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிளவு சமாதான முயற்சியை பாதிக்கும் என ஜனாதிபதி கூறியிருப்பதுஒருநாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய பெருந்தன்மையின் வெளிப்பாடெனலாம்.

விடுதலைப்புலிகளின் தலைமைக்கும், கருணாவுக்கும் இடையிலுள்ள பிளவுநிலையானது குறித்த ஓர் காலப்பகுதிக்குள் சீர்செய்யப்படாதுவிடில் சமாதானப் பேச்சுக்கள் தாமதம் அடைவது தவிர்க்க முடியாதது.

ஏனெனில் கருணா முன்வைத்த பிரதேசவாதம் கிழக்கில் எங்கோ ஒரு மூலையில் வேரூன்றி இருக்குமாயின் அதன் தாக்கம் நிச்சயமாக சமாதானப் பேச்சுக்களில் பிரதிபலிப்பை ஏற்படுத்தவே செய்யும்.

அதிலும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்ட காலப்பகுதியில் பிளவு ஏற்பட்டிருப்பது மேலும் மோசமான விளைவுகளைத் தோற்றுவித்துவிடலாம்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழ்க்கூட்டமைப்பு வேட்பாளர்கள் இரண்டும் கெட்ட நிலையில் உள்ளனர். கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் தமிழ்க்கூட்டமைப்பு வேட்பாளர்கள் வெற்றி பெற்றதும் தென்னிலங்கையில் யார் ஆட்சியமைக்கின்றார்களோ, அவர்களுடன் இணைந்து அமைச்சுப்பதவிகளைப் பொறுப்பேற்று கிழக்கு மாகாணத்தை அபிவிருத்திசெய்யவேண்டுமென கருணா கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு நிபந்தனை விதித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, தாயகக் கோட்பாடு என்பவற்றை வலியுறுத்தி விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, சமாதானப் பேச்சுக்களைத் தொடர வேண்டும் என்ற கொள்கையுடனேயே தமிழ்க் கூட்டமைப்பு தேர்தலில் குதித்துள்ளது.

இந்நிலையில், கருணா போட்டுள்ள நிபந்தனை ஏதோவொரு வகையில் குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்ற அனுமானத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு விடுதலைப் புலிகள் - கருணா பிளவு சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் எனக் கூறியிருக்கலாம்.

எதுவாயினும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனேயே சமாதானப்பேச்சுக்கள் தொடரப்படவேண்டும் எனவும் ஜனாதிபதி கூறியிருப்பது இங்கு ஆழ்ந்து நோக்குதற்குரியது.

அதாவது, விடுதலைப்புலிகள் - கருணா பிளவை, தனக்குச் சாதகமாக்கி தேவையற்ற கருத்துக்களைக் கொட்டித்தீர்க்காது தலைவர் பிரபாகரனுடனேயே பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் என ஜனாதிபதி கூறியிருப்பது பாராட்டுதலுக்குரியது. ஜனாதிபதியின் கூற்று தமிழ்மக்கள் மத்தியில் இருந்த சிறு சலசலப்பை நிவர்த்திசெய்துள்ளது.

ஜனாதிபதி கூறியவை அவர் ஆட்சியமைத்தால் மட்டுமே நிறைவேற்றப்படக்கூடியது என்பதால் ஜனாதிபதி தனது கூற்றில் உறுதியாக இருப்பாரா என்ற கேள்வியும் இப்போது மக்கள் மத்தியில் ஏற்படவே செய்துள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக எதிர்வரும் தேர்தலில் யார் ஆட்சியமைக்கின்றார்களோ அவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றனர் என புலிகளின் தலைமை அறிவித்துள்ளது.

இந்நிலையில், தென்னிலங்கையில் ஐக்கியதேசிய முன்னணி ஆட்சியமைத்தால் என்ன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்தால் என்ன யார் ஆட்சி அமைக்கின்றார்களோ, அவர்களுடன் பேசுவதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றனர் என்ற அறிவிப்பு சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் கொண்டுள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

எனவே, காலாகாலமாக தமிழ்மக்களை ஏமாற்றி வரும் கபடத்தனத்தைக் கைவிட்டு, எதிர்வரும் தேர்தலில் ஆட்சியமைக்கும் கட்சி, விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரவேண்டும். சந்தர்ப்பம் கிடைத்தால் ஜனாதிபதியும் தனது கூற்றை அமுல்படுத்த முன்வரவேண்டும்.

# வலி. மேற்கு பிரதேச சபைக்கு நிதி வசதிகள் போதவில்லை

# நீர் விநியோகம் தடைப்படும் நிலை

(பொன்னாலை)

வலிகாமம் மேற்கு பிரதேச சபைப் பிரிவுகளுக்குட்பட்ட கிராமங்களிற்கான நீர்விநியோகம் தடைப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து நீரை வழங்குவதற்குரிய நிதி வசதிகள் இன்மையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பிரதேச சபைப் பிரிவுகளுக்குட்பட்ட கிராமங்களான அராலி,வட்டு.தெற்கு(முதலியார் கோவிலடி), பொன்னாலை ஆகிய கிராமங்களின் நீர்த்தாங்கிகளில் இருந்து சுமார் 450ற்கும் மேற்படட குடும்பங்கள் குடி நீரைப் பெற்று வருகின்றனர். இக்குடிநீரைப் பெற்றுவரும் பல குடும்பங்கள் கடந்த சில வருடங்களாக சபைக்குரிய பராமரிப்பு நிதியினை செலுத்தவில்லை.இதனால் இப்பிரதேசங்களில் நீர் விநியோகம் செய்வதற்கு நிதிவசதிகள் போதாதுள்ளது. இதனால் தொடர்ந்தும் மேறபடி சபையூடாக நீர்வழங்குவது கேள்விக்குறியாகி உள்ளது எனத் தெரியவருகிறது.

வட்டு.தெற்கு முதலியார்கோவிலடி நீர்த்தாங்கி, பொன்னாலை நீர்த்தாங்கி ஆகிய இரண்டிற்கும் மின்சார நீர் இறைக்கும் இயந்திரம மூலம் நீர் ஏற்றப்பட்டு வருகிறது. அராலியிலுள்ள நீர்த்தாங்கிக்கு மின் பிறப்பாக்கி மூலம் மின் பெறப்பட்டு நீர்வழங்கப்பட்டு வருகின்றது.இதனால் எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவுகளுக்கு சபைக்குப் பணம் தேவைப்படுகின்றது.

இந்தவகையில்,வட்டு.தெற்கு முதலியார்கோவிலடியில் 42ஆயிரத்து155ரூபாவும், பொன்னாலையில் 12ஆயிரத்து 980 ரூபாவும்,அராலியில் 6ஆயிரம்ரூபாவும்இதுவரை பிரதேச சபைக்கு செலுத்தப்படாத மக்களின் வரிநிலுவையாக உள்ளது.

இந்நிலுவைப் பணத்தைச் சபையின் நீர்விநியோக பராமரிப்பு வேலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், தவறுபவர்களுக்கு அடுத்த மாதமளவில் அறிவுறுத்தல்கள் கொடுக்கப்படடு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதேச சபைச் செயலரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-49)

## மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீள இயக்க நடவடிக்கை

### ஐ.ம.சு.மு.ஆட்சிக்கு வந்தால் சாத்தியம

(கொழும்பு)

நாட்டின் பல இடங்களிலும் இயங்கமுடியாத நிலையில் இருக்கும் கைத்தொழிற்சாலைகள் அனைத்தையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும்,மீள இயக்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னணியின் தவிசாளர் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் சுமார் 60ற்கும் மேற்பட்ட கைததொழில்சாலைகள் மூடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறன்றது.

இதனால் 30ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பை இழந்திருக்கின்றார்கள் எனச் சுட்டிக்காட்டப்பட்டுகின்றது.

எனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிஆட்சிக்கு வந்ததும்நாட்டில் பல இடங்களிலும் இயங்க முடியாத நிலையில் இருக்கும் கைத்தொழிற்சாலைகளை மீள இயக்கி அதனூடாக பலருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என விஜிதஹேரத் மேலும் தெரிவித்தார். (உ-61,10)

## தேர்தல் கண்காணிப்பு பணியில் ஜப்பானும்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக தனது கண்காணிப்புக் குழுவொன்றை இம்மாத இறுதியில் இலங்கைக்கு அனுப்புவதற்கு ஜப்பான் அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் ஒன்றில் முதல் தடவையாக கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ள ஜப்பானியத் தோர்தல் கண்காணிப்புக் குழுவில் 12 பேர் அங்கம் வகிக்கின்றார்கள்.

ஜப்பானில் உள்ள கல்விமான்கள் தேர்தல் அலுவலக உயர் அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கிய இந்தக் குழு நாட்டின் பல்வேறு இடங்களுக்குச் சென்று தேர்தல் பிரசார நடவடிக்கைகள்,வாக்களிப்பு,வாக்குகள் எண்ணும் பணி ஆகியவற்றைக் கண்காணிக்கவு--ள்ளது. (உ-61,10)

## இடைக்கால நிர்வாக சபை உள்ளக உரிமையைப் பெறுவதை அடிப்படையாகக் கொண்டது

### ஆங்கிலப் பத்திரிகை செய்தி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட வடக்கு-கிழகக்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை, உள்ளக சுயநிர்ணய உரிமையை பெறுவதைமட்டுமே அடிபபடையாகக் கொண்டதெனத் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்திவெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் வெளியிடப்படும் "தேதுன்ன" என்னும் சிங்களப் பத்திரிகையிலேயே இக்கருத்தினைத் தமிழீழத் தேசியத் தலைவர் தெரிவித்துள்ளதாக மேற்படி பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தனிநாடு ஒன்றைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதாக கூறப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையுமில்லை.

இத்தீர்வுத்திட்டம் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துதல், அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளுதல், சட்ட ஒழுங்கினை நடைமுறைப்படுத்துதல்,மாகாணசபைகளுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற அம்சங்களையே கருத்தில் கொண்டிருப்பதாகவும் இப்பத்திரிகை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (தி-18)

## காலத்துக்குப் பொருத்தமான சட்டங்கள் அவசியம்

### பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய சட்ட திட்டங்கள் அதிகரித்து வரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குப் போதுமானதாக இல்லை என பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்திற்கான கட்டடம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் காலத்திற்குப் பொருத்தமான வகையில் பொலிஸாரிற்குரிய சட்ட திட்டங்களை முற்றாகமாற்றி அமைக்க வேண்டியுள்ளது.

குற்றச் செயல்கள் இடம்பெற்றபின்னர் அதனைக் கட்டுப்படுத்துவதறகான சட்டதிடடங்களை அமுல் செய்வதை விட, குற்றச்செயல்கள் இடம்பெறாத வகையில் சில தடுப்பு நடவடிக்கைளை மேற்கொள்ளவதே சிறந்தது என்றார். (தி-60,10)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எனது சகோதரர்களே! நாம் அனைவரும் கடுமையாக உழைப்போமாக. உறங்குவதற்கு இது நேரமில்லை. எதிர்கால உலகம் நமது உழைப்பைப் பொறுத்துத்தான் அமைந்திருக்கிறது.

சுவாமி விவேகானந்தர்.

## தவக்கால சிந்தனை-25

விஷேசத்திற்கு எங்கள முறையா அழைக்கல,"இவ்வளவு உதவி செஞ்சேன் ஒருவார்த்தை நனறி கூட சொல்லல"இக்கூற்றுகளில் உறவு விரிசல் ஏற்படுவதைப் பார்க்கிறோம். பொதுக் கூட்டத்தில் தலைவரை சரியாகப் புகழ்ந்து பேசவில்லை என்பதால் எததனைபேர் நிறுவனத்தில் இருந்து, கட்சியிலிருந்து விலகியிருக்கிறார்கள். காரணமென்ன, தற்பெருமை, தற்புகழ்ச்சி, வரட்டுக் கௌரவம்.இந்த தற்புகழ்ச்சியை கடவுளிடமே காட்டுவதால் கடவுளுக்கு ஏற்புடையவராக இல்லை என்பதை இயேசு சுட்டிக்காட்டுகிறார். என்னைப் போன்ற பக்தன் இருப்பதால் கடவுளுக்கும் பெருமை என்கிற எண்ணம் நம்மில்பலருக் குண்டு. "என்னாலதான் இந்தப் பங்கு செயல்படுகிறது"என்ற நினைபபெல்லாம் பரிசேயத்தனம்.நான் பெருமைப்படத் தக்கவன் என்பதால் பிறரை இழகவேண்டும் என்பதில்லை. பிறரைப் போற்றுவதில்தான் என் பெருமை அடங்கியிருக்கிறது. வழிபாட்டிலும் சரி, வாழும் முறையிலும்சரி,தாழ்ச்சி பல பரிணாமங்களில் திகழவேண்டும். தாழ்ச்சியென்பது "நான் கீழ்த் தரமான படைப்பு"என்று பணிந்து போவதல்ல. கடவுளின் தீர்ப்புக்கு தலைவணங்குவதேயாகும்.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

## வடக்கு-கிழக்கு...

ளுக்கும் கருணாவுக்கும் இடையிலான பிரச்சினை அவர்களது உள்வீட்டுப் பிரச்சினையாகும். அதில் நான் தலையிடவிரும்பவில்லை.

கொள்கையையும் அபிவிருத்தியையும் ஒன்றாகக் கலக்கக் கூடாது. இரண்டும் வேறானவை. அபிவிருத்தி என்று கூறும்போது அதற்குப் பிரதேச ரீதியான தனியான அணுகுமுறை தேவை இதற்கு எனது ஆதரவு உண்டு.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள உள்வீட்டுப் பிரச்சினை தேர்தல் பிரசாரங்களை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. எங்களுடைய பிரசாரங்களை நாம மேற்கொள்வதற்கு அனைவரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இந் நிலையில், பிளவு இருப்பதை ஒருவரும் விரும்பவில்லை. எப்படியும் ஒற்றுமையாகச் செயல்பட வைக்க வேண்டும் என்பதையே அனைவரும் விரும்புகின்றனர் என்றும் அவர் கூறினார். (ம)

## கிளிநொச்சி...

இதேவேளை, தேர்தல் தினத்தன்று குடாநாட்டிலுள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் முகமாலைக்குச் சென்று வாக்களிக்க முடியும். இதன் போது வாக்காளர்கள் சோதனைக் குட்படுத்தப்படுவர். அதேபோன்று குடாநாட்டிலுள்ள வன்னிமாவட்டத்தைச் சேர்ந்த வாக்காளர்களும் முகமாலையூடாகச் சென்று வாக்களிக்க முடியும். தேர்தல் தினத்தன்று ஏ-9 வீதியூடாகப் பயணம் செய்யும் பயணிகள் தமது பிரயாணத்தை அன்றைய தினம் நிறுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. முகமாலைச் சோதனைச் சாவடியில் காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகும். இவ்வாறு அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, வன்னி மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிவாக்காளர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-19,43,3,5)

# வடக்கின் மாபெரும் போர்
# முதல் இன்னிங்ஸில் சென்ஜோன்ஸ்
## 210 ஓட்டங்களைப் பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் பரியோவான் கல்லூரி அணிக்கும் இடையில் நேற்று முன்தினம் ஆரம்பமான வடக்கின் மாபெரும் போரில் நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது யாழ். மத்திய கல்லூரி அணி 2 விக்கெற் இழப்பிற்கு 95 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்று காலை 4 விக்கெற் இழப்பிற்கு 88 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தைத் தொடங்கிய பரியோவான் கல்லூரி அணி சிறப்பாக துடுப்பெடுத்தாடி முதல் இன்னிங்ஸில் 210 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தினேஸ் 66ஓட்டங்களையும், கிருஷ்ணகுமார் 44 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்து வீச்சில் மத்திய கல்லூரி அணி சார்பில் றஜீவ்குமார் 6 விக்கெற்றுக்களையும், மதுசன் 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

இதனை அடுத்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மத்திய கல்லூரி அணி நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது 2 விக்கெற் இழப்பிற்கு 95 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் துடுப்பாட்டத்தில் றொகான் 47 ஓட்டங்களையும், யஸந்தன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும், கபில்தேவ் ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

பந்து வீச்சில் அன்ரூ, நவகீதன் ஆகியோர் தலா ஒரு விக்கெற்றினை வீழ்த்தினர். (ச-121)

## 5 புலி உறுப்பினர்கள் கடற்படையிடம் சரணாம்!

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயககத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் 5 இளைஞர்கள் திருகோணமலை கடற்படைத்தள முகாமில் சரணடைந்துள்ளார்கள் என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சரணடைந்த 5 இளைஞர்களும் கடற்படையினரால் தற்போது மூதூர்ப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மூதூர் சம்பூர்ப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாமில் இருந்து வந்து சரணடைந்ததாகத் தெரிவித்த பொலிஸார், இவர்களை நேற்று மூதூர் நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

விசாரணை செய்த நீதிவான் 5 இளைஞர்களையும் அவர்களது பெற்றோர்களிடம் கையளிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.(ம)

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | S/வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 222 3214
E.mail: smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர் T.P: 0602212472

## போராளி சாவு

(யாழ்ப்பாணம்)

சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

மேஜர் மோகன் என்று அழைக்கப்படும் காந்திவீதி கொக்குவில் மேற்கைச் சேர்ந்த அருள்ராசா ஜெயக்குமார் என்பவரே சாவடைந்துள்ளார். (ச)



தியாகதீபம் அன்னை பூபதியின் 16ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

*யாழ்ப்பாணம் ஆ. வேலுப்பிள்ளை அன் சன்ஸ் ஆதரவுடன்*

### வலம்புரி-சங்குநாதம் நடத்தும்

பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 2004

### கருத்துக்கணிப்புப் போட்டி

**வினாக்கள்**

- 13வது பாராளுமன்றத்தில் ஆட்சி அமைக்கும் கட்சி எது?
- யாழ். மாவட்டத்தில் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, கட்சி, சுயேட்சை ரீதியாக?
- பாராளுமன்றத்திற்குச் செல்லும், ஒன்பது வேட்பாளர்களினதும் பெயர்கள்?

✂ இங்கே வெட்டவும்

பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 2004
கருத்துக்கணிப்பு

முழுப்பெயர் :-..........................................

தபால் முகவரி :-..........................................

..........................................

அ.அ.இல. :-..........................................

உங்கள் விடைகளை மார்ச் 31ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக

**கருத்துக்கணிப்புப் போட்டி**
**வலம்புரி**
இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் போட்டியில் வெல்வோருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

குறிப்பு:- உங்கள் விடையுடன் கூப்பன் இணைக்கப்பட வேண்டும்.


# காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தானம்
## மண்டலாபிஷேக பூர்த்தி பஞ்சகுண்டபக்ஷநவோத்தர சஹஸ்ர கலச
# சங்காபிஷேக விஞ்ஞாபனம்
## பங்குனி மீ 08–(20.03.2004) இன்று சனிக்கிழமை

விநாயகர் அடியார்களே!

அநாதி நித்திய சுத்த சாட்குண்ய பரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபமாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு தமது அருவ நிலையில் இருந்து இறங்கி உயிர்கள் வாழ்த்தியும், வணங்கியும், எண்ணியும் ஈடேறும் பொருட்டு அருவுருவத் திருமேனி கொண்டும், உருவத்திருமேனி கொண்டும் எழுந்தருளியிருக்கும் அருள் நிலையங்களே திருக்கோயில்களாம். பரமபதியாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு தாம் கொண்ட வடிவங்களுள் கற்பகவிநாயகப் பெருமானது வடிவம் தாங்கி சைவமும் தமிழும் தலைத்தோங்கும் இலங்கையின் சப்தத் தீவுகளில் ஒன்றாக விளங்குவதும், யாழ்ப்பாணத்தின் மேற்கே சிவபுண்ணிய செயல்களில் ஈடுபாடுடையவர்கள் வாழ்ந்துவருகின்றவர்களுமான காரைநகர் வாரிவளவு என்னும் இடத்தில் திக்கரைப்புலம் எனும் பதியும் நாட்புறமும் புதிதாக அமைக்கப்பெற்ற இராஜகோபுரங்களுடன் புதுப்பொலிவு தாங்கி, திருக்கோவிலில் வீற்றிருந்து வேண்டுவார் வேண்டுவனவற்றை வாரிவழங்கும் ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் (1. 2. 2004) நடைபெற்ற ஜீர்னோத்தாரன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 தினங்களாக நடைபெற்றுவரும் மண்டலாபிஷேகத்தின் பூர்த்தி நாளான,

நிகழும் சுபானு வருடம் பங்குனி மாதம் 8ஆம் நாள் (20. 03. 2004) இன்று சனிக்கிழமை ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானுக்குப் பஞ்சகுண்ட பக்ஷ நவோத்திர சஹஸ்ர கலச சங்காபிசேகமும், உற்சவமூர்த்தி விநாயகப்பெருமானுக்கு அட்டோற்தர சங்காபிஷேகமும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு நவகல ஸ்நபனாபிஷேகமும் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. இந்நிகழ்வுகளிலும், முன்புநடைபெறும் கிரியாகாலங்களிலும் அடியவர்கள் அனைவரும் வருகைதந்து தரிசித்து விநாயகர் அருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## கிரியாகால விபரம்

☼ பங்குனி 8ம் நாள் (20.03.2004) சனிக்கிழமை இன்று காலை 7 மணிமுதல் யாகபூசை (காலம் 02) விசேட ஹோமம், மஹா பூர்ணாகுதி விசேட பூசை, பஞ்சமுகர்ச்சனை வேதஸ்தோத்திர திருமுறை பாராயணங்கள் ஆசீர்வாதம், நாதாஞ்சலி.

☼ காலை 10 மணிமுதல் திரவியாபிஷேகம், கலச சங்காபிஷேகங்கள், பிரதான கலசங்கள், வீதிப் பிரதட்ஷனம் அபிஷேகம், விசேட பூசை, வேதஸ்தோத்திர திருமுறை பாராயணங்கள், ஆசீர்வாதம், திருவருட் பிரசாதம் வழங்கல், மகேஸ்வரபூசை.

☼ மாலை 5 மணிமுதல் சாயரட்ஷை பூசை, வசந்தமண்டபப் பூசை, பஞ்சமுகார்ச்சனை விநாயகப்பெருமான் பூந்தண்டிகையில் திருவீதியுலா, திருவருட் பிரசாதம் வழங்கல்.

தேவஸ்தான நிர்வாகஸ்தர்
ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தானம்
வாரிவளவு, காரைநகர்.

சங்காபிஷேக உபயகாரர்

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''